www.padippakam.com


# போராட்டம்

2013 ஜனவரி
மலர் 1 இதழ் 1
நன்கொடை: ரூபா 30/=





07 மனிதர்களை நேசித்த மனிதர்கள் லலித்-குகன்

நீதி விசாரணையால் மறைக்கப்பட்ட வரவு – செலவு 03

இனவாதத்திற்கு எதிரான இன ஐக்கியம் 13


# சம உரிமை இயக்கத்தினால் இனவாதத்தை தோற்கடிக்கும் போராட்ட முன்னணி

*அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்போடு செயற்பட்டு வரும் சிங்கள இனவாத செயற்பாடுகளை தோற்கடிப்பதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து முற்போக்கு மக்களையும் ஓரணியில் திரட்டும் போராட்ட முன்னணியொன்றை நிர்மாணிக்கப்ப போவதாக சம உரிமைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவீந்திர முதலிகே கூறுகிறார். அதற்கான வேலைத்திட்டத்திற்காக நாட்டிலுள்ள அனைத்து இடதுசாரிகள், முற்போக்காளர்கள், புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்களை இணைத்துக் கொள்வதற்கும், இனவாதத்தைத் தோற்கடிப்பதற்காக அனைத்து தேசிய பிரஜைகளை ஒன்றிணைப்பதற்கும் மேற்படி இயக்கம் திட்டமொன்றை வகுத்திருப்பதாகவும் கூறினார்.*

அரசாங்கத்தின் அனுசரணையைப் பெற்றுள்ள அடிப்படைவாதக் குழுவொன்று சமீப காலமாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான மதவாதப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வரும் நிலையில் தற்போது அது முஸ்லிம் மக்களுக்க எதிரான வன்முறையாக பரணமித்துக் கொண்டிருக்கிறது. இந்த இனவாதத் திட்டத்திற்கு தமது சுய இலாபத்திற்காக சமூகத்தை ஆபத்தில் சிக்கவைக்கக் கூட தயங்காத கொள்ளை வியாபாரிகளும் இந்தக் குழுவில் இணைந்துள்ளமை தெரிகிறது. முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்செயல்களின் பின்னணியில் அரசாங்கத்தைச் சார்ந்த அரசியல்வாதிகளும், உத்தியோகப்பற்றற்ற காடையர்களும் குறிப்பிட்டளவு பங்களிப்பு செய்வதாகத் தெரிகிறது. இதற்கிடையில் தமிழ் மக்களை அடக்குமுறை செய்வதற்காக தமிழ் சமூகத்திலுள்ள போர்க்குணம் கொண்ட பிரிவுகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தப்படும் நடவடிக்கையொன்றும் அரசாங்கத்தின் அனுசரணையோடு அரங்கேறி வருகிறது.

இந்த பிற்போக்குகுவாதிகளின் திட்டத்தை தோற்கடிப்பதற்காக சம உரிமை இயக்கம் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. வடக்கின் அடக்குமுறைக்கு எதிராக தென்பகுதி மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களையும் அணிதிரட்டும் ஆர்ப்பாட்டமொன்று டிசம்பர் 18ம் திகதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வரும் கொடூரமான வன்முறைகளுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கான பேச்சுக்கள சபையொன்றை ஜனவரி முதல் வாரத்தில் நடத்துவதற்கும், நாடு பூராவும் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்குகள் நடத்துவதற்கும், துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்குமான ஏற்பாடுகளை செய்வதற்கும் சம உரிமை இயக்கம் தயாராகி வருகிறது.

தமது குறுகிய அதிகாரத் தேவைகளுக்காக கடந்த காலங்களில் போஷிக்கப்பட்ட இனவாதம் இறுதியில் ஆயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்ட யுத்தமாக பரணமித்ததை குறிப்பிட்ட சம உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் ரவீந்திர முதலிகே, அப்படியான பேரழிவொன்று இலங்கை மக்கள் மீது மீள்நிர்மாணிக்கப்படுவதைத் தடுப்பதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும எடுக்கப்படவிருப்பதாகக் கூறினார்.

## கூடங்குளம் குறித்து மௌனம் ஏன்? தோழர் அஜித் குமார நாடாளுமன்றத்தில் கேள்வி

தென்னிந்தியாவின் கூடங்குளம் இடிந்தகரை பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் அணு உலை காரணமாக இலங்கையில 20 லட்சம் மக்கள் ஆபத்தில் சிக்கியிருக்கும் நிலையிலும் அரசாங்கம் ஒன்றுமே அறியாததைப் போல் இருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் அஜித் குமார டிசம்பர் 6ம் திகதி நாடாளுமன்ற ஒத்தி வைப்பு நேரத்தில் பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## நீதிமன்ற நெருக்கடியை மக்கள் வெற்றிக்காக முகாமைத்துவம் செய்ய வேண்டும்

**தோழர் வருண ராஜபக்ஷ**

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் விசாரணை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை மக்கள் வெற்றிக்காக முகாமைத்துவம் செய்ய வேண்டுமென மக்கள் போராட்ட இயக்கத்தின் செயலாளர் தோழர் வருண ராஜபக்ஷ கூறுகிறார்.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் டிசம்பர் 16ம் திகதி நடைபெற்ற " குற்றவியல் விசாரணை மற்றும் குற்றமும் விசாரணையும்" என்ற தொனிப்பொருளில்

தொடர்ச்சி 10ம் பக்கம்

## மக்களை வாழவிடு என்ற தொனிப்பொருளில் கொழும்பில் ஆர்ப்பாட்டம்




*மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்மாவட்ட அமைப்பாளர்களாக செயற்பட்ட லலித் மற்றும்குகன் ஆகியோர் கடத்தப்பட்டு ஒரு வருடம் முடிவடைந்த நிலையில், அவர்களை விடுவிக்குமாறு கோரி கடந்த டிசம்பர் 10ம் திகதி கொழும்பில் பாரரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெற்றது மேலே காணப்படுவது அந்த ஊர்வலத்தின் புகைப்படம்.*

# அரசாங்கத்தோடு ஒத்தூதும் JVP யோடு வேலை செய்ய முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார



மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திற்கு மேலோட்டமாக எதிர்ப்பைக் காட்டினாலும் அரசாங்கத்தோடு உடன்பாட்டு ரீதியில் வேலை செய்வதாகவும், அதனால், தொடர்ந்தும் அவர்களோடு வேலை செய்ய முடியாதென்பதால் தான் சுயேட்சை உறுப்பினராக செயற்படப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார கூறினார். மக்கள் போராட்ட இயக்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

”1971 கிளர்ச்சியின்போதும், 87-89 கால கட்டத்திலும் உயிர் தியாகம் செய்தவர்கள், மக்கள் விடுதலை முன்னணியைக் கட்டியெழுப்ப தியாகம் செய்தவர்கள், இந்நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் மற்றும் இடதுசாரிகளின் நோக்கங்களுக்கு முரணாக JVP அதிகாரபீடத் தலைவர்கள் செயற்படுவதனால், அதற்கெதிராக கட்சிக்குள் கருத்தாடல்கள் இருந்தமை உங்களுக்குத் தெரியும். அந்தக் கருத்தாடலின் ஒரு சந்தர்ப்பத்தில் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேறினார்கள். தான்தோன்றித் தலைவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் கட்சியிலிருந்து நானும் வெளியேறினேன். அந்தத் தலைவர்கள் கட்சியின் பெரும்பான்மை அங்கத்தினர்களது கருத்துக்கு முரணாகவே செயற்பட்டார்கள். அவர்கள் நாடாளுமன்றத்திலும் அப்படித்தான் நடந்து கொண்டார்கள். யாழ் மாவட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளராகச் செயற்பட்டவரும், பின்னர் மக்கள் போராட்ட இயக்கத்தின் தேசிய அமைப்பாளராகச் செயற்பட்டவருமான தோழர் லலித் குமார் வீரராஜ் மற்றும் தோழர் குகன் முருகானந்தன் ஆகியோர் கடத்தப்பட்ட வேளையில், அது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் அதிகாரத் தலைவர்கள் வாய் திறக்கவே இல்லை. குமார் தோழரும், திமுது சகோதரியும் கடத்தப்பட்டபோதும் அவர்கள் எதுவுமே கூறவில்லை. அது மாத்திரமல்ல, பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிராக அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டபோது, அது குறித்து நிலையியற் கட்டளை 23/2ன் கீழ் அறிக்கையொன்றை வெளியிடுமாறு நான் அநுர குமாரவிடம் கேட்டுக் கொண்டேன். என்றாலும் அவர் அதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. வடக்கில் மீனவர்கள் எதிர் கொண்ட பாரதூரமான பிரச்சினைகளின்போதும் மௌனமாகவே இருந்தார்கள்.

அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியின் புகழ் பெற்ற தலைவரான, 87-89 கிளர்ச்சியின்போது கொல்லப்பட்ட ரஞ்சிதம் குணரத்தினம் தோழருக்கு எல்டீடீஈ முத்திரை குத்தப்படும்போது அதனை நிராகரிப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி முன் வரவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியின் அதிகார பீடம் பெயரளவில் அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகக் காட்டிக் கொண்டபோதும், செயலில் அரசாங்கத்துக் உடந்தையாகவே கடந்த காலம் பூராவும் செயற்பட்டார்கள். 2011ல் பிரதேச சபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதனை மக்கள் விடுதலை முன்னணி எதிர்த்தது. அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக விரிவாக விமர்சனத்திற்கு உள்ளாக்கினார். ஒரு வேளை சோற்றுக்காக அதனை ஆதரிப்பதற்கு வெட்கமில்லையா என ஐக்கிய தேசியக் கட்சியைப் பார்த்துக் கேட்டார். ஆனால் இன்று அதற்கு JVP ஆதரவாக இருப்பது ஒருவேளை சோற்றுக்காகத்தானா என்பது எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் அன்று சமர்ப்பிக்கப்பட்ட அதே சட்டமூலத்தை ஒரு புள்ளியைக் கூட மாற்றாமல் மீண்டும் சமர்ப்பித்தபோது அதனை நிறைவேற்றுவதற்கு இடமளித்தார்கள். இந்த நிலைமை மாறுவதற்கு என்ன காரணம்? நான் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்திடம் கேட்டபோது அவர் கூறினார், நாங்கள் எதிர்த்தாலும் கூட அது நிறைவேற்றப்படும் என்று. அப்படியானால் நாங்கள் எதற்காக நாடாளுமன்றத்திற்கு வரவேண்டும்? நாடாளுமன்றத்தில் இருப்பது ஒரேயொரு உறுப்பினராக இருந்தாலும் அதனை எதிர்த்து மக்கள் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும். அந்த சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது வெளியேறிவிடுவதாகவும், அதுதான் ஜனநாயக தேசிய கூட்டணி உறுப்பினர்களின் நிலைப்பாடு என்றும் எனக்குக் கூறப்பட்டது. அதற்கேற்ப வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது நான் சபையில் இருக்கவில்லை. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் சபையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அதனை விவாதிக்காமலேயே நிறைவேற்ற அனுமதியளித்தார்கள்.

குற்றவியல் வழக்கு விசாரணை திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டபோது அதற்கெதிரா எதுவுமே கதைக்கவில்லை. 2009லிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் கொண்டுவரப்பட்ட இந்த சட்டமூலம், தொழிலாளர், மாணவர்கள், அரசாங்கத்திற்க எதிரான சக்திகள் போன்றவற்றை அடக்குவதற்காகவே கொண்டுவரப்பட்டது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் எதுவித எதிர்ப்பையும் காட்டவில்லை. அரசாங்கம் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அவசர நாடாளுமன்ற அமர்வொன்றுக்கு அழைப்பு விடுத்தது. மக்கள் விடுதலை முன்னணி எந்த எதிர்ப்பும் இல்லாமல் அதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. அன்றைய தினம் திவி நெகும திருத்தச் சட்ட மூலத்தின் தீர்ப்பை நீதிமன்றம் வெளியிட்டிருந்தது. அந்த சட்டமூலத்தை அன்றே நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுத்து அரசாங்கத்தின் வெற்றியைக் காட்ட வேண்டிய தேவை இருந்தது. அன்றைய நிகழ்ச்சி நிரலில் இல்லாத அந்த சட்ட மூலத்தை விவாதத்திற்கு எடுக்க மக்கள் விடுதலை முன்னணி ஒத்துழைப்பு வழங்கியது.

மக்கள் விடுதலை முன்னணியின் அதிகாரப்பீட தலைவர்களின் இந்த நடவடிக்கை காரணமாக 12,14,16 திகதிகளில் ஒன்றில் எனக்கு உரையாற்ற வாய்ப்பு தருமாறு கேட்டு அநுர குமார திசாநாயகவிற்கும், எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்கவுக்கும் இரண்டு கடிதங்கள் அனுப்பினேன். அநுர குமார திசாநாயக இப்போது அந்தக் கடிதத்தை வாசிக்க நேரமில்லை என்று கூறி கடிதத்தை திருப்பி அனுப்பியிருந்தார். நாடாளுமன்ற பணியாளர்களுக்கும் அது தெரியும்.

எவ்வாறாயினும் எதிர்கட்சி அமைப்பாளர் அலுவலகத்தின் மூலம் எனக்கு 12ம் திகதிக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், பிற்பகலில் உரையாற்றுவதற்காக தயாராகி, போய்ப் பார்க்கும்போது எனது பெயர் வெட்டப்பட்டிருந்தது. அது குறித்து கேட்டபோது, எதிர்க் கட்சியின் அமைப்பாளர் எனது பெயரை நீக்கயதாகக் கூறினார். அவரிடம் கேட்டபோது, அநுர குமார திசாநாயக “ அஜித் குமாரவிற்கு நேரத்தை ஒதுக்குவது நான். அதனை நான் வேறு யாருக்கும் தர மாட்டேன் என்று கடுமையான தொனியில் கூறினார் அதனால் பெயர்நீக்கப்பட்டது என்று கூறினார்.

இப்படியான அரசியலில் மூழ்கி இருப்பவர்களோடு வேலை செய்வது பிரச்சினை இந்த நிலைமையில் எனக்கு வாக்களித்த மக்களின், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களின், இந்நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்பார்புகளை நிறைவேற்ற முடியாது. அரசாங்கத்தோடு உடன்பட்டு வேலை செய்பவர்களோடு எதுவும் செய்ய முடியாது. ஆகவே, எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சுயேட்சை அங்கத்தினராக செயற்பட நான் தீர்மானித்துள்ளேன். அதே நேரம் எதிர்காலத்தில் முன்னிலை சோசலிசக் கட்சிக்கு எனது ஆதரவை வழங்க உத்தேசித்துள்ளேன். என்றும் கூறினார்.

# வருண ராஜபக்சவிற்கு எதிராக JVP தொடுத்த வழக்கு தள்ளுபடி



வருண ராஜபக்சவின் மாகாண சபை உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யக் கோரி மவிமு தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு நவம்பர் மாதம் வழங்கப்பட்டது.

அவருடைய மாகாண சபை உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யக் கோரி JVP யினால் தொடரப்பட்ட வழக்கிற்கு எதிராக வருனணராஜபக்சஅவர்களால் தொடுக்கப்பட்ட மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மாகாண சபை உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வது அரசியல் அமைப்பிற்கு முரனானது என தீர்பளித்து வழக்கை தள்ளுபடி செய்தது.

# கூடங்குளம் அணு உலையிலிருந்து இலங்கை 500 கி.மீட்டருக்குள்



தென்னிந்தியாவின் கூடங்குளம் இடிந்தகரை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் அணு உலைக்கு எதிராகப் போராடும் மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளப் போவதாக கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் கூறுகிறது.

மேற்படி இயக்கத்தின் அறிமுக நிகழ்வு குறித்து கொழும்பு நூலக சுவடுகள் மற்றும் சேவைகள் கூடத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போது இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

அந்த ஊடகச் சந்திப்பின்போது கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் நடவடிக்கைக் குழு உறுப்பினர்களான முன்னிலை சோசலிஸக் கட்சியின் சார்பில் அதன் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ, இயற்கையின் ஆய்வு கேந்திரத்தின் சார்ப்பில் ரவீந்திர காரியவசம், பூமியின் நண்பர்கள் சூழல் அபிவிருத்தி ஒன்றியத்தின் சார்பில் கருணாதாச மூனகம, மாவோவாத கம்யூனிஸக் கட்சியைச் சார்ந்த பூமித்தாயின் பிள்ளைகள் அமைப்பின் சார்பில் சுரேந்திர அஜித் ரூபசிங்க, மற்றும் வர்கீஸ சுமனசேகர ஆகியோர் பங்குபற்றினர்.

# யாழ் பல்கலை மாணவர்கள் மீதான தாக்குதல

## அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்




பாதுகாப்புப்படையினரால் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை குறித்து அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. கடந்த நவம்பர் 27ம் திகதி யாழ் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட கலாச்சார விழாவின் போது அத்து மீறி நுழைந்த பாதுகாப்புப் படையினர் சோதனை நடவடிக்கை எனற பெயரில் மாணவர்களின் விடுதிகளுக்குள் புகுந்து உடமைகளை சேதப்படுத்தியிருப்பதோடு, துப்பாக்கிகளைக் காட்டி மாணவர்களை அச்சுறுத்தியிருப்பதாகவும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ பண்டார கூறினார்.

“ இந்த அத்துமீறலைக் கண்டித்து நவம்பர் 28ம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீதும் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் தொடுத்துள்ளனர். இதனால் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்துள்ளார்கள். கடுமையான தாக்குதலுக்காளான மூன்று மாணவர்கள் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அது மாத்திரமல்ல, மேலும் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு மிருகத்தனமாக தாக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இப்படியான நடவடிக்கைகள் மூலம், வடபுலம் விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பது நன்றாக விளங்குகிறது” எனவும் சஞ்சீவ பண்டார கூறினார்.

ஜனநாயக மற்றும் மனித உரிமை மீறப்பட்டு தமிழ் மக்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தும் அரசாங்கத்தின் தேவை, மீண்டும் ஒரு மனிதப் படுகொலைக்கு தூண்டுகோலாகவே இருக்கும் எனவும் குறிப்பிட்ட அவர், இவற்றை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் ஒன்று சேர்ந்து போராட முன்வர வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

# நீதி விசாரணையால் மறைக்கப்பட்ட வரவு — செலவு

நீதி மன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையிலான மோதல். கடந்த சில நாட்களாக ஊடகங்களினதும் மக்களினதும் கவனத்தை திருப்பியிருந்தது. 117 நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒப்பமிடப்பட்ட உயர்நீதி மன்ற நீதியரசருக்கு எதிரான குற்றவியல் நீதி விசாரணை பிரேரணை நவம்பர் 1ம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட கையோடு, அரசாங்கததுக்கும் நீதிமன்றத்துக்கும் இடையிலான மோதல் அரங்கத்துக்கு வந்தது. இதற்கு முன்னர் கூட நீதிமன்ற தீர்ப்பொன்றை சபாநாயரிடம் ஒப்படைப்படைப்பதற்குப் பதிலாக நாடாளுமன்ற செயலாளரிடம் ஒப்படைக்பபட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நீதிமன்றத்தின் மீது குறை கூறப்பட்டது. இதற்கிடையில் இரண்டு வழக்குகள் தொடர்பில் நவம்பர் 6ம் திகதி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசாங்கத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இடையிலான முறுகல் நிலையை தோற்றுவித்து அரசியல் வட்டாரங்களில் ஓரளவு சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் நீதி விசாரணைக்கான பிரேரணையை தான் ஏற்றுக் கொண்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் அறிவித்த சபாநாயகர், அதற்காக விஷேட தெரிவுக்குழுவொன்றையும் நியமித்தார். அதே சமயம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திவி நெகும சட்டமூலம் மற்றும் குற்றவியல் வழக்கு கட்டளை (விஷேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. திவி நெகும சட்டத்தின் பெரும்பாலான உறுப்புரைகள் நாட்டின் அடிப்படை சட்டத்துக்கு முரணானது எனவும், அவற்றை நிறைவேற்றுவதாயிருந்தால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருந்தால் மட்டும் போதாது, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் வேண்டுமெனவும், திவி நெகும சட்டத்தின் சில உறுப்புரைகளை மக்கள் அபிப்பிராய வாககெடுப்பின் பின்னரே நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றவியல் வழக்கு கட்டளை ( விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தில் இறந்த காலத்தையும் உள்ளடக்கி குறிப்பிடப்பட்டிருக்கும் உறுப்புரையில் திருத்தங்களைக் கொண்டுவருமாறும், இல்லையாயின், அதனை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமெனவும், அன்று நடைபெற்ற இன்னொரு வழக்கிலும் தீர்ப்பளிக்கப்பட்டது. நீதி விசாரணைக்கான பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டு, அதற்காக தெரிவுக்குழு நியமித்தமையை பார்க்கும்போது, நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்கச் சபை ஒரு பக்கத்திலும், நீதி மன்றம் இன்னொரு பக்கத்திலும் நேரெதிராக மோதலுக்கு தயாராவது தெரிய வந்தது.

மக்கள் மறந்த வரவு செலவு அறிக்கை

அரசாங்கத்தின் அரசியல் இயந்திரம் மற்றும் நீதிமன்றத்துக்கிடையில் உருவாகியுள்ள முரண்பாடுகள் அரசாங்கத்துக்குக் கிடைத்த அதிர்ஷ்டச் சீட்டைப் போன்றிருந்தது. இந்த குழப்பங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி நவம்பர் 8ம் திகதி நாடாளுமன்றத்தில் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றினார். ஜனாதிபதியால் வாசிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கையைப் பார்க்கும்போது பழைய மொந்தையில் புதிய வைன் நிறப்பப்பட்டிருந்ததைக் காண முடிந்தது. இலங்கையின் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த முதலாளித்துவக் அரசாங்கங்கள் பயணித்த நவ தாராளமய முதலாளித்துவ பாதையிலேயே இந்த அரசாங்கமும் பயணிப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. உற்பத்தித் துறையை வளர்ப்பது என்ற பெயரில் நிதியியல் சேவைத் துறைக்கு சார்ப்பான கொள்கையை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை வரவு செலவு திட்டத்தைப் பார்க்கும் போதும் அந்தக் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு ஏற்ப விவசாயத்துக்கு 5.3 பில்லியன், கால்நடை வள அமைச்சுக்கு 2.8 பில்லியன், ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கு 0.9 பில்லியன், பயிர்ச்செய்கை அமைச்சுக்கு 2.6 பில்லியன் என்ற வகையில் மாற்றாந்தாய் மனப்பாங்கோடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உல்லாசப் பயண தொழிற் துறையை இலக்காக வைத்து





289.5 பில்லியனும், பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள் விரிவாக்கத்துக்கு 139 பில்லியனும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சுரண்டிக் கொழுத்த பெருச்சாலிகளுக்கு மேலும் கொள்ளையடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இந்த நிலையில் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பது என்பது வெறும் கனவாகத்தான் இருக்கப் போகிறது. நாளுக்கு நாள் விரிவடைந்து வரும் வர்த்தகத் தட்டுப்பாடுக்கும், அதன் மூலம் உக்கிரமடையும் வெளிநாட்டுச் செலவானி தட்டுப்பாடுக்கும் நடைமுறை சாத்தியமான தீர்வுகள் ஆட்சியாளர்களிடம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிவதோடு, இம்முறை வரவு செலவு அறிக்கை அது குறித்து சாட்சி பகர்கின்றது.

தனியார் தொழிற் துறையாளர்களுக்கு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு, கருப்புப் பணத்தைக் கொண்டு வரும் வியாபாரிகளுக்கு, பங்குச் சந்தையோடு தொடர்புடைய பெருச்சாலிகளுக்கு வரி விலக்கு, வரி ரத்துச் செய்யப்படல், வெளிநாட்டுச் செலவாணி கட்டுப்பாடுகளை தளர்த்தல் போன்று வரப்பிரசாதங்களை வாரி வழங்கியிருக்கும் அரசாங்கம், ஒடுக்கப்பட்ட மக்கள் மீது கொண்ட கரிசனையால் அவர்களுக்கு நக்கிக் கொள்ள சொச்சமாகக் கொடுத்திருக்கிறது. அதிகரிக்கப்படும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடாக 13,442.50 கேட்ட அரச ஊழியர்களுக்கு 1500 ரூபா கொடுப்பனவை வழங்கியிருக்கிறது. அதுவும் 750 ரூபா வீதம் இரண்டு முறையில். வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு கூட படாத பாடுபடும் தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் வரவு செலவு திட்டத்தில் ஒரு வார்த்தை கூட இல்லை. ஒரு காலத்தில் தொழிலாளர்களின் மீட்பர்களாக தம்மைக் காட்டிக் கொண்டு தொழிலாளர்களின் தலை மேல் சவாரி செய்த தலைவர்கள் தொழிலாளர்களை அப்படித்தான் கவனிக்கிறார்கள். வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதாகக் கொடுத்த உறுதி மொழி குப்பையில் தூக்கி வீசப்பட்டுள்ளது. எதிர் வரும் காலங்களில் ஏற்பட்டக் கூடிய இயற்கை அழிவுகளின் போது இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு காப்புறுதி அறக்கட்டளையொன்று நிறுவப்பட்டுள்ளது. 50 கிலோ உர மூடையின் விலை 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு

**மக்களை ஏமாற்றுவதற்காக அதிக நிதியை ஒதுக்கிய வரவு செலவு அறிக்கை இதுவாகும்.**

அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பணம் அந்த காப்புறுதி அறக்கட்டளைக்கு செலுத்தப்படும். இறுதியாக இயற்கை அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒதுங்கிவிட்டு அதனை விவசாயிகளின் தலையில் சுமத்தியுள்ளது. கடந்த வரட்சியின்போது விவசாயிகள் பெற்றுக் கொண்ட கடன் தொகையை வெட்டி விடுவதாக, வடமத்திய மாகாண சபை தேர்தலின் போது வழங்கப்பட்ட வாக்குறுதி காற்றில் மறைந்து விட்டதோடு, இறுதியாக வட்டி மாத்திரம் வெட்டப்பட்டதாக வரவு செலவு திட்ட உரையின் போது கூறப்பட்டது. விவசாயிகள் இப்படித்தான் கவனிக்கப்பட்டிருக்கிறரர்கள். மீனவர்கள் சிறு கைத்தொழிலாளர்கள், சுய தொழில் செய்வோர்கள் குறித்து, ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் வரவு செவவு அறிக்கையில் ஒரு வார்த்தை கூடஇல்லை.

எப்போதும் போலவே இம்முறை வரவு செலவுத் திட்ட அறிக்கையும் விவசாயம், கால்நடைவள உற்பத்தி. மீன்பிடித் தொழில், கிராமியக் கைத்தொழில், “பெர” கைத்தொழில், ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழில்கள் போன்ற உற்பத்தித் துறைகள் கவனியாது விடப்பட்டுள்ளதோடு, கல்வி, சுகாதாரச் சேவை, போக்கு வரத்துச் சேவை ஆகிய நலன் புரி சேவைகளுக்கு வெட்டு விழுந்த வரவு செலவு அறிக்கையாகும். வருமானத்துக்கான ஒரே வழியாக உல்லாசப் பிரயாணத் தொழிற் துறை மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் மீது நம்பிக்கை வைத்திருப்பதோடு, போலி மத்தாப்புகளின் கண்காட்சிகளால் பொருளாதார வளர்ச்சியைக் காட்டும் வரவு செலவு அறிக்கையாக இருக்கின்றது. போலி பாதுகாப்பு என்ற பெயரால் அடக்கு முறைக்கும், நகர அபிவிருத்தி மற்றும் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி என்ற பெயரால் மக்களை ஏமாற்றுவதற்குமாக அதிக நிதியை ஒதுக்கிய வரவு செலவு அறிக்கை இதுவாகும்.

இம்முறை வரவு செலவு அறிக்கையும் எப்போதையும் போல சமூகத்தின் அடிமட்ட பிரஜைகளின் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீது வரிகளை விதித்திருக்கிறது. அவர்களிடமிருந்து மேலும் மேலும் பறித்து, பணக்காரர்களுக்கு நிவாரணம் வழங்குதற்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கையாகும். ஆகவே, இதன் பின்னர் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், வேலையற்றோர் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ளவர்களின் விரக்தியும் கோபமும் அதிகரிப்பதை தடுக்க முடியாது போகும்.

அதன் முன்னறிவிப்புக்களை சில காலமாகவே நாம் கண்டு வருகிறோம். ஓரிரு மாதங்களுக்கு முன்னர் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகரிக்குமாறு கேட்டு பேராடியதோடு, பின்னர் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகளோடு கல்வி உரிமையை பாதுகாத்துக் கொள்வது என்ற கோரிக்கையை முன் வைத்து பாடசாலை ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் சங்கங்கள் போராட்டத்தில் குதித்தன. இதைத் தவிர பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழற்சங்கங்கள் மிகச் சிறந்த வாழ்க்கை நிலைக்கான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டக் களத்தில் இறங்கின. வரவு செலவு அறிக்கை சமரப்பிக்கப்பட்ட கையோடு இந்த நிலை மேலும் தீவிரமடையும் போக்கு காணப்பட்டதோடு, நாளுக்கு நாள் எதிர்ப்பு நடவடிக்கைகளும் உக்கிரமடைந்தன. ஆனாலும், நவம்பர் ஆரம்பத்தில் அரசாங்கத்துக்கும் நீதிமன்றத்துக்குமிடையிலான முரண்பாடுகள் திடீரென தலை தூக்கிய கையோடு, தொழிற்கங்கங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் எதிர்ப்புகள் அனைத்தும் அடிபட்டுப் போயின. இப்போது ஜனாதிபதி அமைதியான சூழலிலேயே வரவு செலவு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வாசித்தார். இந்த நிலைக்கு ஊடகங்கள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்கியதோடு, அந்த அனைவரினதும் நடவடிக்கைகளில் போலி நீதிமன்ற சுயாதீனம் தொடர்பிலான கோஷங்கள் முன்னிலைக்கு வந்து மக்களின் வாழ்க்கை நிலை குறித்த போராட்டம் அடிபட்டுப் போனது.

வீதியில் இறங்குவது யாருக்காக?

மக்களின் எதிர்ப்பை மழுங்கடிப்பதற்காக அரசாங்கத்துக்கு அதிர்ஷ்டம் கிடைக்கும் போது, எதிர்க் கட்சி செய்திருக்க வேண்டியது என்னவென்றால், போலி கோஷங்களுக்குப் பதிலாக வர்க்கத்தின் தேவைகளுக்காக ஒடுக்கப்பட்ட மக்களை அணிவகுத்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக எதிர்க்கட்சி என்ன செய்ததென்றால், நீதிமன்றத்தின் சுயாதீனத்தைக் பாதுகாக்க வீதிக்கு வருமாறு ஒடுக்கப்பட்ட மக்கள் சக்திகளிடம் வேண்டுகோள் விடுத்தது. மக்களை வீதிக்கு இறக்க வேண்டியது மொத்த சமுதாயத்தையும் இந்த அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்கேயல்லாமல் நீதிமன்றத்தைக் காப்பதற்கல்ல, மக்களை இந்த அழிவுக்குள் தள்ளி நாசமாக்கியதில் நீதி மன்றத்துக்கும் ஒரு பங்கு உண்டு.

பொது மக்கள் எதிர்ப்பார்த்த பாதுகாப்பு இந்த நிறைவேற்று அதிகாரத்தால் கிடைக்க மாட்டாதென்பதையும், பொதுவாக மனித வாழ்க்கைக்கான பாதுகாப்பு இல்லாமலானதற்கு நிறைவேற்று அதிகாரம் பொறுப்புக் கூற வேண்டுமென்பதையும் புதிதாகக் கூற வேண்டியதில்லை. தன்னோடு உடன்படாத சந்தர்ப்பங்களில் உயர்

**தொடர்ச்சி 10ம் பக்கம்**

www.padippakam.com





# விஜய பாடசாலையில் தலைகள் துண்டிக்கப்பட்டு குவிக்கப் பட்டிருந்தன

இலங்கைக்கும் துண்டிக்கப்பட்ட தலைகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. புதை குழிகள் காரணமாக அரசாங்கங்கள கவிழ்ந்த வரலாறுகளும் உண்டு. புதைகுழிகளினாலேயே ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் உண்டு. இந்த மண்ணில் இன்னும் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட வண்ணமுள்ளன. இன்முறை மாத்தளைப் பிரதேசத்தில் புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாத்தளை புதைகுழி குறித்து தகவல் கிடைப்பதற்கு முன்னரேயே 71 கிளர்ச்சியோடு சம்பந்தபட்டவர்களுடையது என்று பொறுப்பு வாய்ந்தவர்களால் கூறப்பட்டது. ஆனால் அவை 71ஐ சேர்ந்தவர்களதல்ல, 89ஐ சேர்ந்தவர்களது என்று தெரிய வருகிறது. ஆம், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் " பொறுப்புக் கூற வேண்டியவர்களேதான்"

" பலகடுவ நீரூற்றுக்கு பக்கத்தில் கை கால்களைக் கட்டி 22 பேரை உயிரோடு பெற்றோல் ஊற்றி கொளுத்தினார்கள். அங்கிருந்த அநேகமானோரர் கூம்பியன்கொட பன்சாலையின் வதை முகாமில் இருந்தவர்கள். அவர்களது கை கால்கள் உடைக்கப்பட்டு நடக்கக்கூட முடியாமல் இருந்தார்கள். உயிரோடு கொளுத்தப்பட்டபோது சிலர் தீயிலிருந்து தப்பிப்பதற்காக துடித்துத் துடித்து ஊர்ந்து சென்றாலும் அவர்களால் உயிர் வாழ முடியவில்லை. துடித்து துடித்து மடிந்தார்கள். அவர்களது வேதனைக் குரலைக் கேட்டவர்கள் இன்றும் கூட உயிரோடு இருக்கிறார்கள். ரத்தோட்டை வெலங்கஹுவத்தையில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் வீட்டோடு எரிக்கப்பட்டார்கள். சிறு குழந்தைகளோடு வீட்டைப் பூட்டி வெளியே வர முடியாதவாறு வீட்டைச் சுற்றி பெற்றோல் ஊற்றப்பட்டு வீட்டோடு சேர்த்து கொளுத்தப்பட்டார்கள். வீட்டிலிருந்த அத்தனை பேரும் தீயில் கருகி மாண்டார்கள். முவந்தெனிய என்ற கிராமத்தைச் சேர்ந்த பெண் போலிஸை இராணுவமே சுட்டுக் கொன்றது. அதன் பின்னர் விஜய வித்தியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 35 பேரை வீட்டில் கொண்டுபோய் விடுவதாகக் கூறி இராணுவ டிரக் வண்டியில் கிராமத்துக்கு அழைத்து வந்து கைகளிரண்டையும் பின்புறமாகக்கட்டி அவர்களை சுட்டுக் கொன்றார்கள். அவர்களின் உடல்களை பெற்றோல் ஊற்றி கொளுத்தும்போதும் சிலர் இறந்திருக்கவில்லை என்று ஐ.பி. சோமரத்ன பிற்காலத்தில் திருகோணமலையில் வைத்து என்னிடம் கூறினார்".

இது மாத்தளையில் வெளிவந்துக் கொண்டிருக்கும் கூட்டுப் புதைகுழிகளின் வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பங்களாகும்.

போஸிலேன் தொழிற்சாலைக்கு அருகில் செயற்படுத்தப்பட்டு வந்த பொலிஸ் பிரிவைத் தவிர மேலும் 4 வதை முகாம்கள் மாத்தளை நகரில் செயற்பட்டு வந்தன. அவை கஜபா படைப் பிரிவின் துணைப்பிரிவின் கீழ் செயற்பட்டவையாகும்.

" மாத்தளையில் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு பிடித்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் விஜய வித்தியாலயம், கூம்பியன்கொட பன்சலை மற்றும் விருந்தினர் விடுதியில் செயல்பட்டு வந்த முகாம்களில் கடுமையான சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். கூம்பியன்கொட பன்சாலை பிரவெனா மண்டபத்திற்கு பின்னால் இரும்புத் தகடொன்றை வைத்து அதற்குக் கீழ் தீ மூட்டி கை கால்கள் கட்டப்பட்ட மனிதர்களை அதன் மேல் போட்டு உயிரோடு கொளுத்தினார்கள். சில நேரங்களில் இந்தத் தகடுக்கு மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்தன. அதன் பின்னர் தோல்கள் உரிந்து இரத்தம் வழிந்தோடும்வரை அடித்துக் கொன்றார்கள். அந்த இரத்தக் கறைகள் சமீப காலம் வரை பன்சாலையில் காணப்பட்டது. பிரித் நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டிருந்த 15 பேரைக் கொன்றார்கள். இப்போது அந்த கூட்டுப் புதைகுழி இருக்கும் இடத்தில் அமைந்திருக்கும் மெக்டொவெல் கோட்டைக்குச் சொந்தமான தோட்டத்தில் காணப்பட்டவை விஜய வித்தியாலயத்தின் ஓல்கட் மண்டபம் மற்றும் குணசேன மண்டபத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எழும்புக் கூடுகள். அங்கு கிட்டத்தட்ட 800 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். சிலர் கொலை செய்யப்பட்டு தலைகள் மாத்திரம் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருந்ததாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் சிலர் பிற்காலத்தில் கூறினார்கள். சில நாட்களில் விருந்தினர் விடுதியிலும் விஜய வித்தியாலயத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் அந்த தோட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள். அந்த சடலங்கள் எங்கும் கொண்டு செல்லப்படவில்லை. இப்போது சொல்கிறார்கள் 47 வருட கொள்ளை நோயினால் இறந்தவர்கள், மண்சரிவினால் இறந்தவர்கள் அங்கு புதைக்கப்பட்டார்கள் என்று. வில்ஷெ யார் மலையில் ஏற்பட்ட மண்சரிவினால் அவ்வளவு பேர் இறக்கவில்லை. அவர்கள் வைத்தியசாலை மயானத்தில் புதைக்கப்பட்டார்கள். மயானம் அருகிலேயே இருக்கும் போது ஏன் உடல்களை ஒரே இடத்தில் புதைத்தார்கள்? 71ல் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டு யாரும் கொல்லப்படவில்லை. அவர்கள் போலிஸ ில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் 13 பேர் இறந்தார்கள். அதுவும் தாம்பேகம கிராமத்தில். அவர்களது உடல்கள் நாவுல பகுதியில் புதைக்கப்பட்டன".

நீங்கள் இதுவரை வாசித்த இந்த வார்த்தைகள் அந்த வதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்து உயிர் பிழைத்த ஒருவருடைய வார்த்தைகள்தான். மாத்தளை வைத்தியசாலையின் பின்புறம் மெக்டோல் கோட்டைக்குச் சொந்தமான தோட்டத்தில் காணப்பட்ட கூட்டு புதைகுழிகளின் வரலாறு மட்டுமல்ல, 88-89 காலகட்டத்தில் மாத்தளை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞரகளின் தலைவிதி அப்படித்தான் தீர்மானிக்கப்பட்டது. கொள்ளை நோயினால், மண்சரிவினால் மற்றும் 71 ல் கொல்லப்பட்டவர்களின் உடல்கள்தான்

**தொடர்ச்சி 7ம் பக்ககம்**



மாக்சியம்-01

'நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே, பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாகிறது!" என்றார் கார்ல் மார்க்ஸ். அவர் அப்படி வாழ்ந்தார் என்பதால், உலகமே அவரிடம் இருந்து கற்கின்றது. உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் வழிகாட்டியாகவும், ஆளும் வர்க்கத்தின் எதிரியாகவும் இருக்க முடிகின்றது. அவர் மரணித்து 130 வருடம் கடந்த நிலையில், இதுதான் எதார்த்தம். எந்தத் தத்துவத்தாலும், எந்த நவீனத்துவத்தாலும் அவர் எடுத்துக் காட்டிய உண்மைகளை மறுத்துவிடவோ மாற்றிவிடவோ முடியவில்லை.

இந்த வகையில் ஆயிரம் ஆண்டுகள் சிந்தனையாளர்களின் வரிசையில் முதலாம் இடத்தில் நிற்பவர் கார்ல் மார்க்ஸ். ஒரு முதலாளித்துவ நாட்டின் செய்தி நிறுவனமான பி.பி.சி, நடத்திய கருத்துக் கணிப்பில், அதன் நேயர்கள் தங்கள் அபிமான சிந்தனையாளராக கார்ல் மார்க்ஸைத் தெரிவு செய்திருக்கின்றனர். இதற்கு எதிர்வினையாற்றிய பிரிட்டிஸ் வலதுசாரிய பத்திரிகை ஒன்று 'மார்க்ஸ் எனும் அரக்கன்' என்ற தலைப்பிட்டு, முதன்முறையாக மார்க்சைப் படித்தபின் எழுதுகின்றார் 'உலகமயமாக்கம், ஏற்றத் தாழ்வுகள், அரசியல் ஊழல், ஏகபோகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி, உயர் கலாச்சாரத்தின் வீழ்ச்சி, தொடர்ந்து உயிர்த் துடிப்பை இழந்து வரும் நவீன வாழ்க்கையின் தன்மை இவை பற்றியெல்லாம் ஆணி அடித்தாற் போலப் பேசும் மார்க்சின் எழுத்துக்களைக் கண்டேன். இதே விசயங்களைத்தான் இன்றைய பொருளாதார வல்லுனர்கள் ஏதோ புதிய பிரச்சினைகளாகக் கருதி எதிர்கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில், மார்க்சின் காலத்தடம் பதிந்த பாதையில்த்தான் செல்கிறோம் என்பதை அறியாமலேயே அந்தப் பாதையிலும் நடக்கிறார்கள்' மார்க்சைப் படித்தபின் நியூயார்க்கர் இதழில் காசிடி எழுதிய கருத்துக்கள் இவை.

சுரண்டும் வர்க்கங்களைச் சேர்ந்த உலகின் முன்னணி பிரதிநிதிகள், மார்க்சைப் பற்றி கடந்த பத்தாண்டில் சொன்னவை இவை. சுரண்டப்படும் வர்க்கங்கள் 130 வருடங்களுக்கு முன் இறந்து போன மார்க்சை நேசிப்பது ஏன் என்பதை, சுரண்டும் வர்க்கமே சொல்லும் கூற்றில் இருந்து

அவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இப்படி பிரான்ஸ், ஜெர்மன் மற்றும் இத்தாலி என்று பலமுறை நாடு கடத்தப்பட்டார். இறுதியில் பிச்சைக்கார 'அகதி'யாக 1849இல் இலண்டனில் குடியேறினர்.

இலண்டனில் வீட்டு வாடகை கொடுக்க முடியாத நிலையில், வீட்டை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர். அவரின் வீட்டில் இருந்த அனைத்து பொருட்களையும் அவர்கள் அபகரித்தனர். சின்னஞ்சிறு குழந்தைகளுடன் மார்க்ஸ் குடும்பம் குளிரில் வாடியது. நிரந்தர வருமானமற்ற, அடுத்த நேர உணவுக்கு வழிதெரியாத ஒரு 'அகதி'க் குடும்பம், அகதி என்றால் வீடு கொடுக்க மறுக்கும் கொடுமையான சூழலில் வாழ்ந்த மார்க்ஸை, இன்று உலகம் தன் வழிகாட்டியாகக் கொள்கின்றது. இலண்டனில் வீட்டு வாடகை கொடுக்கவும் முடியாத சூழலில் மார்க்சின் கோட்டும் சூட்டும் அடகுக் கடைக்குப் போனது. இதனால் வெளியில் கூட அவர் செல்ல முடியாத, இயல்பான வாழ்வைக் கூட மார்க்ஸ் இழந்தார்.

அந்தக் குடும்பத்தை பற்றி மார்க்ஸ்சின் மனைவி ஜென்னியின் ல் வார்த்தையில்

கண்டும் உண்மையில் எனக்கு வெறுப்பாய் இருக்கிறது. உலர்ந்த எலும்புகளை உடைத்து மாவாக அரைத்து அதிலிருந்து சாறு பிழிவதும், அரசியல் சம்பந்தமாகக் கட்டுரைகள் எழுதுவதும் ஒன்றுதான். நான் ஒரு கழுதையாய் இருந்திருக்கலாம். இந்தப் பத்திரிகை நிர்வாகிகளுக்கு, அவர்கள் கொடுத்த பணத்திற்கு அதிகமாகவே கட்டுரைகள் எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்பதை மட்டும் என்னால் உணரமுடிகிறது..." என்று தன் ஒருநேர ரொட்டித் துண்டுக்கான



# மாற்றத்துக்கு வழி திறக்கிறது!

பிச்சைக்கார 'அகதி' பற்றி பலவாகத் தூற்றும் அளவுக்கு மார்க்ஸ் ஒடுக்கப்பட்ட மக்களால் போற்றப்படுகின்றார்.

இப்படி வலதுசாரிய ஆளும் வர்க்கங்கள் தூற்ற, ஒடுக்கப்பட்ட மக்கள் அவரை நேசிக்கின்றனர். உலகம் சுரண்டும், மற்றும் சுரண்டப்படும் வர்க்கங்களின் முகமாக, பிளவுபட்டு இருப்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. உலகின் ஒவ்வொரு பொருளாதார நெருக்கடியும் எழும் போதும், கார்ல் மார்க்ஸ் சொன்னபடி நடப்பதைக் கண்டு ஆளும் வர்க்கம் திகைத்துப் போகின்றனர். அவர் சொன்ன வர்க்கப் போராட்டமும், வர்க்கமற்ற அமைப்பு வந்துவிடுமோ என்று ஆளும் வர்க்கங்கள் பீதியுடன் அலறுகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் கார்ல் மார்க்ஸை தங்கள் வழிகாட்டியாகக் கொண்டு அதற்காக போராடுவதை தடுக்க முடியவில்லை.

மூலதனத்தின் நெருக்கடிகளின் போது, சுரண்டும் வர்க்கம் மார்க்ஸ்சின் மூலதனத்தை தெரிந்து கொள்வதன் மூலம் எதிர்கொள்ள முனைகின்றன. இலண்டனின் '.'பைனான்சியல் டைம்ஸ்' பத்திரிகை 'உலக முதலாளித்துவம் வெற்றிக்கொடி நாட்டி பத்தாண்டுகள் கூட ஆகவில்லையே! அதற்குள்ளாகவா நாம் நெருக்கடியில் சிக்கிவிட்டோம்?' என்று அதிர்ச்சியுடன் ஒரு கட்டுரையை வெளியிட்டது. அக் கட்டுரையின் தலைப்பென்ன தெரியுமா? 'டாஸ் காபிடலை (மார்க்சின் 'மூலதனம்' நூலை) இன்னொருமுறை புரட்டிப் பார்ப்போம்!' என்பதாகும்.

'நியூயார்க்கர்' பத்திரிகையின் வணிகத் துறைச் செய்தியாளர் ஜான் காசிடி, ஒரு முதலீட்டு வங்கியின் முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்த உரையாடல் பற்றி அக்டோபர் 1997இல் எழுதினார். 'வால் தெருவில் (நியூயார்க்கின் பங்குச் சந்தைத் தெரு) நான் எந்த அளவிற்கு நேரத்தைச் செலவிடுகிறேனோ, அந்த அளவிற்கு மார்க்ஸ் கூறியது சரிதான் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். முதலாளித்துவத்தை ஆய்வு செய்வதற்கு மார்க்ஸ் மேற்கொண்ட முறைதான் சரியானது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை' என்று சொன்னாராம் அந்த வங்கி முதலாளி.

மார்க்சின் நூல்களை இதுவரை படித்திராத நியூயார்க்கர் செய்தியாளரான காசிடி, ஆவலை அடக்கமாட்டாமல்

தெரிந்து கொள்ள முடியும். சோவியத் திரிந்து சிதைந்து சிதறிய பொழுது மார்க்ஸ்சின் தத்துவம் பொய்த்துவிட்டது என்றவர்கள், கம்யூனிசம் செத்துவிட்டது என்றவர்கள், மக்கள் மத்தியில் மார்க்ஸ் உயிர்வாழ்வதை சாகடிக்க முடியவில்லை. 1883இல் இறந்த மனிதன் தொடர்ந்து மரணிக்காமல் மக்களுடன் இருப்பது கண்டு கதறும் ஆளும் வர்க்கங்கள், மக்களை ஒடுக்கியடக்கி ஆள்வதன் மூலம் மார்க்சியத்தை புதைத்துவிட முனைகின்றனர். இப்படித்தான் ஆளும் சுரண்டும் வர்க்கங்கள் மார்க்சியத்தை எதிர்கொள்கின்றது. தத்துவ ரீதியாகவல்ல.

மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ்சின் காலத்துக்கு முன்போ அல்லது பின்போ, எக்காலத்திலும் சமூக வளர்ச்சியிலும், அதன் மாற்றத்திலும் தொழிலாள வர்க்கத்தின் முக்கிய பங்கு பற்றி ஒரு உயர்ந்த, உண்மையான, அறிவியல் கோட்பாடுகள் எவராலும் உருவாக்கப்படவில்லை. அந்தப் பெருமை மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் என்ற மாபெரும் தத்துவ மேதைகளையே சாரும். எனவேதான், பாட்டாளி வர்க்கத்துக்கும், அதன் தலைமைச் சக்திகளுக்கும் சமூக மாற்றத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்கவும், சமவுடமைச் சமூகத்தை - சோசலிச சமூகத்தை நிர்மாணிக்கும் பெரும் பணிக்கும் மார்க்சிச அறிவை பெற்றுக்கொள்ளல் என்பது மிகமுக்கிய முன்னிபந்தனையாக உள்ளது. தற்போதுள்ள சமூக ஒழுங்கின் பாதுகாவலர்களாக இருந்து கொண்டிருக்கும் மார்க்சிச எதிர்ப்பாளர்களின் தொடர்ந்த கடுமையான தாக்குதல்கள் எதுவும் அதன் அடித் தளத்தின் ஒரு சிறு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட மார்க்சியத்தைப் படைத்த கார்ல் மார்க்சின் வாழ்க்கையையும் எங்கெல்ஸ்சின் நட்பையும் ஜென்னியின் தோழமையையும் நாம் தெரிந்து கொள்வோம்.

சுரண்டும் வர்க்கத்துக்கு எதிராக சதி செய்ததாக நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டவர் மார்க்ஸ். இதற்காக பெல்ஜியத்தில் மார்க்ஸும் அவரது மனைவி ஜென்னியும் சிறையில் அடைக்கப்பட்டனர். தொடர்ந்து 24மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற

கூறினால் "என் குழந்தை பிறக்கும் போது அந்த குழந்தைக்கு தொட்டில் இல்லை. என் குழந்தை இறக்கும் போது அந்தக் குழந்தைக்கு சவப்பெட்டி கூட வாங்க முடியவில்லை" என்கிறார். வறுமையே தொழுநோயாக, கார்ல் மார்க்ஸ்சின் குழந்தைகளில் சில வறுமைக்கு இரையாகி இறந்தனர். மார்க்சியத்தைப் படைத்த மார்க்ஸ், அதை எழுதும் பேப்பருக்கும் கூடத்தான் போராட வேண்டி இருந்தது. குழந்தைக்கு ஒரு ரொட்டித் துண்டா, எழுத ஒரு பேப்பரா என்று முடிவெடுக்க வேண்டிய சூழலில் மார்க்ஸ் போராடினார். வசதியான உயர்குடி ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பணக்காரப் பெண்ணாகப் பிறந்த ஜென்னி, அதை துறந்து மார்க்ஸ்சுடன் இணைந்து தன் வாழ்வில் பேப்பரா ரொட்டியா என்பதற்குக் கூட தீர்வுகாண போராடினார்.

இப்படிப்பட்ட ஜென்னி கார்ல் மார்க்ஸை விரும்பி ஏற்கக் காரணமாக ன இருந்தது "மனிதன் தனக்காக மட்டுமே வாழ்பவன் அல்லன், அவன் சக மனிதர்களுக்காகவும் பாடுபட வேண்டும். தனக்காகப் பாடுபடுவன் நல்ல சிந்தனையாளனாக இருக்கலாம் - நல்ல நிர்வாகியாக இருக்கலாம். ஆனால், நல்ல மனிதனாக இருக்க முடியாது." என்ற வரிகள் தான். இப்படித்தான் ஜென்னி வாழ்க்கையும் போராட்டமும் தொடர்ந்தது.

இது பற்றி 1862இல் மார்க்ஸ் ஏங்கல்சுக்கு எழுதிய கடிதத்தில் "நானும் குழந்தைகளும் செத்துவிட்டால் நல்லது என்று என் மனைவி தினமும் சொல்கிறாள். நான் அவளைக் குறைகூற முடியாது. இந்த நிலைமையில் நாங்கள் தாங்கிக் கொள்ள வேண்டிய அவமரியாதைகளும் கடும் துன்பங்களும் பயங்கரங்களும் உண்மையிலேயே வர்ணிக்க முடியாதவை" என்று எழுதுகின்றார்.

தனது மகள் இறந்ததும் தன் தோழருக்கு எழுதிய கடிதத்தில் "இந்நாட்களில் நான் அனுபவித்த மிகையான துன்பங்களுக்கு இடையேயும் உன் நட்பும் நாம் இவ்வுலகத்திற்கு செய்ய வேண்டிய அறிவார்ந்த பணியும் இருக்கிறது என்ற நம்பிக்கையுமே என்னை நிமிர்த்தி வைத்துள்ளது" என்றார். அந்தளவுக்கு பிறருக்காக துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தவர்.

ஜென்னி புற்று நோயால் 1881இல் மரணித்தபோது மருத்துவம் செய்யக்கூட பணம் இருக்கவில்லை. 1883இல் மார்க்ஸ்சின் சுவாசப் பையில் கட்டி இருந்தபோது மருத்துவம் செய்யப் பணமின்றி மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருந்தார்.

தன் இந்த நிலை பற்றி கார்ல் மார்க்ஸ் குமுறி எழுதும் போது ".... நியூயார்க் ட்ரிப்யூன் பத்திரிகை ஏதோ எனக்கு தயவு காட்டுவதாக நினைத்துக் கொண்டு, போனால் போகிறது என்பதுபோல் எனக்கு சன்மானம் தருவதும், அந்த நிலைமை எனக்கு ஏற்பட்டிருப்பதைக்

வருமானத்தைப் பெற அவர் பட்டபாட்டை வெளிப்படுத்துகின்றார்.

எதற்காக இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்கின்றேன் என்பதைக் குறித்த மார்க்ஸ், "நான் அந்தக் காலம் முழுவதும் மரணத்தின் விளிம்பில் இருந்தேன். எனவே உடல் நலத்துடன் இந்த ஒவ்வொரு நிமிடத்தையும் எனது நூலை எழுதி முடிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டியிருந்தது. அதற்காக நான் எனது உடல்நலம், சந்தோசம் மற்றும் குடும்பத்தைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது. நான் காரியவாதிகளைப் பற்றியும் அவர்களது விவேகம் பற்றியும் சிரித்துக் கொள்கிறேன். ஈவிரக்கம் அற்றவர்களுக்கே மனித குலத்தின் துயரங்கள் குறித்துக் கவலைப்படாமல், தம் சொந்த விசயங்களைக் கவனித்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் எனது மூலதன நூலை குறைந்த பட்சம் கைப்பிரதி வடிவத்தினாலாவது முழுமையாக உருவாக்காமல் சாவேனானால், நான் என்னை மெய்யாகவே உலகம் தெரியாதவன் என்று எண்ணிக் கொள்வேன்" என்றார்.

மார்க்சியம் இப்படித்தான் பிறந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை குறித்து மார்க்ஸ் போராட்டம் மார்க்சியமானது. மார்க்ஸ்சின் தியாகங்கள் அர்ப்பணிப்புகள் மூலம் உருவானதே மார்க்சியம். இதில் ஏங்கெல்ஸின் பங்களிப்பு இன்றி மார்க்ஸ ியம் உருவாகவில்லை. மார்க்ஸ்சின் ஒவ்வொரு நாடி நரம்புடனும் அது பிணைக்கப்பட்டு இருந்தது.

இது பற்றி லெனின் "தமது முன்னோரிடையே காணப்பட்ட எந்த நெஞ்சுருக்கும் கதையையும் மீறும் உறவு கொண்ட அறிஞர்களும் போராளிகளுமான இவ்விருவராலேயே தமது அறிவியல் உருவாக்கப்பட்டது என பாட்டாளி வர்க்கம் சொல்லக்கூடும்" என்றார். "எங்கெல்ஸ் எப்போதுமே தன்னை இரண்டாம் இடத்திற்கு ஒதுக்கிக் கொள்பவராகவும் தன்னலம் அற்றவராகவுமே காணப்பட்டார்..." என்று அவரின் பங்களிப்பை லெனின் எடுத்துக் காட்டுகின்றார்.

அப்படிப்பட்ட ஏங்கெல்ஸ், மார்க்ஸ ின் மரண நிகழ்வில் "நம் கட்சியின் மிகப் பெரும் அறிஞர் தம் சிந்தனையை நிறுத்திவிட்டார். நானறிந்த அளவில், மிகவும் பலமான இதயம் தன் துடிப்பை நிறுத்திவிட்டது..யுக யுகாந்திரங்களுக்கு அவர் பெயர் நிலைத்து நீடித்து நிற்கும். அவரது மாபெரும் பணியும் நிலைத்து நிற்கும் என்றார்.அதுதான் உண்மை. அந்த மார்க்சியத்தைக் கற்றுக் கொண்டு போராட முனைவோம்.

தொடரும்

www.padippakam.com






# அழிவின் மறுபக்கம் கூடங்குளம்!

அணுகுண்டு வெடித்தால்த்தான் அழிவு...

அணுவுலை வெடிக்காமலே அழிவு...

கூடங்குள அணுமின் உலையை இழுத்து மூடு..!

போராடும் மக்களோடு கை கோரு..,

இது நமது போர்.

மன்னார் வளைகுடா மற்றும் யாழ் தீபகற்பம் எனும் இலங்கையின் தலைமாட்டில் எப்போதும் மக்கள் தத்தம் தலையணைக்குள்ளேயே அணுக்குண்டொன்றினை வைத்து உறங்கும்படியான நிம்மதி கெட்ட இரவுகளை உருவாக்கி வைத்திருக்கின்றது கூடங்குளம் அணுமின்னிலைய நிர்மாணம்.

இது இந்திய தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினை மட்டுமல்ல,கண்ணிமைக்கும் நேரத்துக்குள்அதன் எல்லை தாண்டிய கதிர்வீச்சுக்குள் அகப்படுவது இலங்கையின் யாழ் தீபகற்ப மன்னார் வளைகுடா மக்கள் தான். பூகோளரீதியில் இப்பிரதேசங்கள் கூடங்குளத்துக்கு மிகவும் அண்மையானவை என்பதை நாங்கள் அறிந்திருந்தும் கூடங்குள அணுமின்னிலையம் பற்றியோ அதனால் ஏற்படப்போகும் அதீத சேதங்கள் பற்றியோ எவ்வித கரிசனையுமின்றி இருக்கின்றோம். இது இந்திய மக்களின் பிரச்சினை மட்டுமல்ல. அதையும் விட கூடங்குள அணுமின்னிலைய நிர்மாணம் இந்திய இறையாண்மையின் எல்லைக்குட்டபட்ட வலயத்துக்குள் இருந்தாலும் அதுஇலங்கை வாழ் வடபகுதி மக்களின் வீட்டு வாசல்படியிலேயே இந்த ஆபத்து விதைக்கப்படுகின்றது என விழிப்புணர்வூட்ட வேண்டிய,தமிழ்மக்கள் மேல் கரிசனை உள்ளதாக பீற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் கூடங்குளத்தினைப் பற்றி அலட்டிக்கொள்ளக்கூடவில்லை.

இரவோடு இரவாக தூக்கத்திலிருந்த பல்லாயிரம் உயிர்களைக் காவுகொண்ட போபால் விசவாயு விபத்திற்கு இன்றும் கூட எவரும் பொறுப்பாக்கப்படவுமில்லை. இந்த மனிதப்படுகொலைக்கு காரணமான இரசாயன ஆலையின் அதிபதி அமெரிக்க அன்டர்சன் எந்த நீதிமன்றிலும் நிறுத்தப்படவுமில்லை. அது ஒரு அணுக் கதிரியக்க விபத்து அல்ல. அப்படியில்லாதிருந்த போதும், யூனியன் காபைட் என்ற அமெரிக்க நிறுவனத்தால் அந்த விசவாயு விபத்தில் உடனடியாகக் கொல்லப்பட்ட 8000 மனித உயிர்களும் அதன் தொடர்ச்சியாய்க் கொடிய நோய்வாய்ப்பட்டு இன்றுவரை மரணித்துப் போன 20000 மக்களும் காலில் மிதிபட்டு மதிப்பற்று இறக்கும் மண்புழுக்களாக மட்டுமே கணிக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கொள்ளை இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டியங்கும் மனிதவிரோத ஏகாதிபத்திய அமெரிக்க நிறுவனங்களின் இந்திய தாதாக்களாக அவர்களின் பாதுகாவலர்களாக இந்திய அரசே இயங்கும் போது மக்கள் மண்புழுக்கள் தான். இலாப வெறிகொண்ட பன்னாட்டு நிறுவனங்களின் உள்நாட்டுப் பாதுகாவலர்களாகவே நம்நாட்டு அரசுகள் இருக்கின்ற போது கூடங்குளத்தில் மட்டுமல்ல எங்கள் வீட்டுக் கோடிப்புறங்களிலும் கூட அணுஉலை நிறுவப்படலாம். இதுவேதான் இன்று நடந்துகொண்டிருக்கின்றது.

அத்தியாவசிய தேவைகளுக்கான மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குதல், மக்களுக்கு மின்வெட்டில்லாத,தடையற்ற மின்சாரம் வழங்குதல் போன்ற மக்களிடத்தில் கவர்ச்சிகரமான காரணங்களாக எடுபடக்கூடிய மயக்கும் திட்டங்களைக் கூறி, மக்களின் எதிர்ப்பைத் தணிக்கும்படியான தந்திரோபாயப் பிரச்சாரங்கள் செய்தபடி,அணுஉலை மின்னுற்பத்தி நிலையங்களை உருவாக்குகிறார்கள்.

ஆனால் மக்களுக்கு மின்சாரம் என்ற பெயரில்,பன்னாட்டு பெருத்த இலாப முதலைகளுக்காகவே இந்த அணுமின் உற்பத்திச் சாலைகள் உருவாக்கப்படுகின்றன. அவர்களுடைய பெருத்த இலாபக் கொள்ளைகளுக்காக தங்குதடையின்றி மின்சாரம் வழங்குவதற்காகவே இந்த அணுவாலைகள் என்பதை மக்கள் உணராதிருப்பதற்காக எல்லாவற்றையும் மூடி மறைப்பார்கள். பன்னாட்டு நரிகளுக்காக உள்நாட்டு நாய்களாக நம்நாட்டு அரசுகள் ஊளையிடுவார்கள்.

இவ்வாறான நிர்மாணங்களுக்கு எதிராக விழிப்புற்ற மக்களின் போராட்டங்களை சொந்த நாட்டு மக்கள் என்றும் பாராமல் அடித்து நொருக்குவார்கள். தேவையெனில் கொன்றும் குவிப்பார்கள்.

கூடங்குளம் அணுமின்னிலைய எதிர்ப்புப் போராட்டம் எமது கோடிப்புறத்திலேயே நடந்து கொண்டிருக்கின்றது. போர்க்குணம் கொண்ட மக்கள் போராட்டத்தின் எதிர்ப்பலை கண்டு அஞ்சி நடுங்கும் அரசு, தன் படைகளை ஏவி, போராடும் மக்களை முற்றுகையிடுகிறது. கைது செய்கிறது. சிறையில் அடைக்கிறது.

பெண்கள் குழந்தைகள் என்றும் பாராமல் அடித்து நொருக்கப்படுகிறார்கள். கைது செய்து சிறையிடப்படுகிறார்கள். இந்தியக் கடற்படையால் மணற்பாடு எனும் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனி ஜான் சுட்டுக் கொல்லப்பட்டார். சகாயம் எனப்படும் ஒரு மீனவர் தாழப்பறந்து தலைக்கு மேல் வட்டமடித்த விமானப்படை விமானத்தின் ஒலி அதிர்ச்சியினால் இரத்த நாளங்கள் வெடித்த காரணத்தால் நாகர் கோவில் மருத்துமனையில் மரணத்தை தழுவினார்.

இத்தனை போராட்டங்களையும் மீறி, போராட்டத்தில் தியாகிகளாகி உயிர்நீத்த சகாயம், அந்தோனி ஜான் உடல்களையும் மிதித்து வெறியோடு நடந்து கொள்ளும் இந்திய அரசு, விமானப்படை தரைப்படை கடற்படை பொலீசு என தனது அனைத்து அடக்குமுறை ஏவற்பட்டாளங்களையும் ஏவிவிட்டு, தனது சொந்த மக்களையே வேற்று நாட்டுப் படை எதிரியாக கணித்துப் போர் தொடுத்து நிற்கின்றது.

இலங்கையில் பெறப்படும் மின்சாரம் இன்றுவரை அணுசக்தி சாராத நீர்மின்சார ஆலைகளிலிருந்து உற்பத்தியாகின்றது. அதனால் கூடங்குளம் அணுமின்னுலை நிலையம் குறித்து நாங்கள் எதுவும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றிருக்க முடியாது.

நாடுகளுக்கிடையில் இருப்பது இன்று வெறும் எல்லைக் கோடுகளே. அந்த எல்லைக் கோட்டுக்கு அப்பால் நடக்கும் எவற்றையும் நாங்கள் தீர்மானிக்க முடியாது என்று பேசாதிருக்க முடியாது. இன்று அழிவுகளுக்கும் நாடுகளைச் சூறையாடும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் எல்லைகளே கிடையாது. எந்த நாடுகளின் இறையாண்மைகளையும் மிதித்தோ, அல்லது தங்களது அந்தந்த நாட்டு கூட்டாளி அரசுகள்,பன்னாட்டு நிறுவனங்களின் உள்நாட்டு உளவாளிகள், பங்காளிகள் ஊடாகவோ எல்லைகள் கடந்து எதுவும் நடந்தேறும் என்பது இலங்கையின் வரலாற்றிலேயே நாங்கள் அனுபவித்த ஒன்று. 71ஆம் ஆண்டுக் கிளர்ச்சியும் முள்ளிவாய்க்கால் கொலைக்களமும் இந்திய இலங்கை கூட்டாளிகளின் மனிதப்படுகொலை அரங்கங்களாக நாங்கள் கண்டுகொண்டவை.

**கூடங்குளம்**
**அணுமின்னிலைய**
**எதிர்ப்புப்**
**போராட்டம் எமது**
**கோடிப்புறத்திலேயே**
**நடந்து**
**கொண்டிருக்கின்றது.**

இன்று மகிந்தவும் மன்மோகன் சிங்கும் ஏகாதிபத்தியங்களின் இணைபிரியாக் கூட்டாளிகள். ஏவல் நாய்களாக அவர்கள் எவற்றையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மடை விரிப்பவர்கள். மனிதப் பிணங்களை காலில் மிதித்து உழைப்போர் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுக்கும் தனிநபர் இலாபவெறிகொண்டலையும் பன்னாட்டு நிறுவனங்களின் மின்சாரத் தேவைகளுக்காக அணுவாயுத ஆய்வுகளுக்காக முழத்துக்கொரு அணுவாலை கூட நிர்மாணிப்பதற்கு நமையாளும் இந்த அரசுகள் தயங்கா. ஏற்படும் விபத்துக்கள் கொழுத்த இலாபங்களைப் பாதிக்காதவரை அவர்கள் மக்கள் குறித்து எதுவும் அக்கறை கொள்ளப் போவதில்லை.

ஆனால் மக்கள் மீதே தமக்குக் கரிசனை உண்டு என இவர்கள் காட்டிக் கொள்வார்கள். விபத்துகள் ஏற்படாதவகையிலேயே இந்த அணு உலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன எனவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாமே கனகச்சிதமானவை என்றும் அணுப் பொறியியலாளர்கள் விஞ்ஞானிகள், அறிஞர்கள்‘அஞ்ச வேண்டாம்’என அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.அணுசக்தி பாதுகாப்பானது என்பதற்கு அறிவியலைத் துணைக்கழைப்பார்கள். மேலும் உங்கள் அச்சத்தை தூண்டிவிடுபவர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்பார்கள்.வேற்றுநாட்டு கையாட்கள் என்பார்கள். இவ்வாறுதான் பெருத்த முதலீடுகளுக்கு முண்டு கொடுத்து வயிறு வளர்க்கும் ”அறிவுசார்” துறையினர் கொழுக்கும் இலாப முதலீட்டிற்கு ஊழியம் செய்வார்கள்.

மேற்கு நாடுகளிலும் ஜப்பான் போன்ற மற்றைய நாடுகளிலும் ஏற்பட்ட அணுமின்னுலை விபத்துக்களை கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த விபத்துக்களின் அழிவுகளிலிருந்து மக்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்வுகளாலும், அந்த விபத்துக்கள் ஏற்படாதவாறு பாதுகாக்க கனகச்சிதமான தொழில்நுட்பம் இருக்கிறது எனவே அணுமின்னுலை பாதுகாப்பானது என்ற உத்தரவாதம் கண் முன்னாலேயே ஏற்பட்ட விபத்துக்களினால் பொய்த்துப் போய்விட்டது என்பதனாலும்,அந்த நாடுகளில் இந்த அழிவோடு கூடிய அணுமின்னுற்பத்திக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்பலைகளால் இவ்வாறான நிர்மாணங்களைக் கைவிட்டு சூழலை ‘மாசுபடுத்தாத’மாற்று மின்னுற்பத்தி முறைகளை நோக்கித்தள்ளவைத்த மக்கள்அபிப்பிராயங்களால், அந்தந்த நாடுகளில் காலாவதியாகி கைவிடப்பட்ட தொழில்நுட்பங்களையே இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியா இலங்கை போன்ற ”கேட்பாரற்ற” வேற்று நாடுகளுக்கு நகர்த்துகின்றார்கள். மேற்கு நாடுகளில் ”மவுசு” இல்லாத இம் அணுமின்னுலை மின்னுற்பத்தி முறைகளை ”ஏற்றுமதி” செய்து இங்கு விற்றுக் காசாக்குகிறார்கள்.

பாதுகாப்பு பற்றிய எந்தக் கரிசனையையும் கைகழுவி விட்டுவிட்டு அதற்கான பொறுப்புகளிலிருந்து தப்பிப்பதற்கு தகுந்த தோதான நாடுகளிவை என்பதும்,இந்தக் கொள்ளையர்களுக்கு ஏற்றவாறு மக்களை ”பதப்படுத்தி” வைக்கும் ஏகாதிபத்திய அடிமை அரசுகள் இங்கிருக்கின்றன என்பதுவும் இந்த அணுமின்னுலை நிர்மாணங்கள் இன்று நம் நாடுகளை நோக்கி நகர்த்தப்படும் காரணங்களில் உள்ளடங்குகின்றன.

இதில் புதிய அணுமின்னுலைகளை கடந்த 30 ஆண்டுகளாக மேற்கு நாடுகள் நிர்மாணிக்கவில்லை என்பது இங்கு ஒரு குறிப்பு. ஆனால் அதே பழைய தொழில் நுட்பத்தைக் கொண்டு இந்தியாவெங்கும் 36 அணு உலைகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்துக்கு இந்திய அரசு மக்கள் பணத்தை கோடிக்கணக்கில் வாரியிறைத்திருக்கின்றது.

எங்கேயாவது மக்களுக்கு மலிவு விலையில் தடையின்றிய மின்சாரம் வழங்குவதற்கு அணுமின் உற்பத்தியே பொருத்தமானது என யாராவது கூறினால் அதனை புரிந்து கொள்வது எவ்வாறெனில், மலிவு விலையில் தடையின்றிய மின்சாரம் பன்னாட்டு உள்நாட்டு கொள்ளை முதலாளிகளின் தடையின்றிய கொழுத்த இலாப உற்பத்திக்காக சூழல் மாசடைதல் கதிர்வீச்சு போன்றவற்றுக்கு விலைகொடுக்கும் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் கல்லறை என வாசிக்கவும்.

**தொடர்ச்சி 7ம் பக்ககம்**

www.padippakam.com



# மனிதர்களை நேசித்த மனிதர்கள்

# லலித்-குகன்



மனிதனின் தேவைகளில் லலித் காணாமல் போனவர்களை தேடிச் சென்றதற்காய் கடத்தப்பட்டார். உலக நாகரீகங்கள் மனிதனை நன்றாக வாழ்வதற்காகவே நாள் தோறும் மாறி வருகின்றது. மனிதர்கள் பலவகையான இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள்.சிலர் போராடி வாழ்கிறார்கள்.பலரோ சாவை எதிர் கொள்கிறார்கள். மனித குலத்தில் ஒரு சிறு கூட்டமே போராட தயாராக இருக்கின்றது. மனிதர்களுக்கு உதவவும் தயாராக இருக்கின்றது.

அப்படிப்பட்ட மனிதன்தான் லலித்- லலித் மனிதர்களையும் மனிதத்தையும் காக்க வடபகுதிக்கு புறப்பட்டுச் சென்றது. நாம் செல்லும் சாதாரண பாதையால் அல்ல கப்பல் மூலமாக லலித் யாழ்ப்பாணத்திற்குச் சென்றது மனிதர்களை மீட்க கஷ்டப்பட்டவர்களுக்கு உதவ லலித் கடத்தப்பட்டதாகவும் காணாமல் போனதாகவும் கூறப்பட்ட பலரை கண்டுபிடித்தார். வட பகுதி மக்களின் உண்மை வாழ்வு பற்றி வெளி உலகத்திற்கு வெளிக்காட்ட லலித் தன்னை அர்ப்பணித்தார்.

லலித்தின் பயணங்கள் தேடல்கள் அனைத்தும மனிதம் சார்ந்ததாகவே இருந்தது. லலித் மனிதத்தின் தேவை 30 வருட கால யுத்ததின் பின் யாழ் பயணித்த லலித் அங்குள்ள மக்களின் உண்மையான தேவை அறிந்து கொண்டார்.மனிதர்களை தேடும் பணியில் அவர் இடைவிடாது பாடுபட்டார்.இனி வரமாட்டார்கள் என்று நம்பியிருந்த பலரை லலித் தேடி கண்டுபிடித்தார். அரசாங்கம் சொல்வது அனைத்தும் அப்பட்டமான பொய் பெரும் தொகையான மக்கள் இன்னமும் முகாம்களில் இருக்கின்றார்கள் அவர்களுக்கு போதிய உணவு இல்லை வீடு மற்றும் தொழில் பிள்ளைகளின் கல்வி வசதி கூடஅங்கு சரியாக இல்லை இவைகளை லலித் வெளி உலகத்திற்கு எடுத்து வந்தார்.

காலங்களுக்குல் புதைந்து லலித் காணாமல் போக விரும்பவில்லை. அவர் சதா நேரமும் மற்றவர்களின் விடுதலைக்காகவே பாடுபட்டார் அவர் மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராகச் செயற்பட்டார். லலித் கண்ட கனவுதான் மனிதர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். காணாமல் போவது கடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் பலராலும் அச்சத்தோடு பார்க்கப்பட்டது. இலங்கைத்தீவின் வேறொரு தேசமாக வர்ணிக்கப்பட்டது. பலரும் பாதைகளை வரைபுகள் மூலம் விவரித்துக்கொண்டிருந்தார்கள் லலித் தன்னந்தனியே கடல் வழியாகவே புறப்பட்டுச் சென்றார். மனிதம் காக்க காலம் லலித்தை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச்சென்றது. லலித் அங்குள்ள துன்பப்படும் மக்களுக்கு நண்பரானார் லலித் நிறையவே செய்தார் தன்னால் முடிந்த அனைத்தையும் ஏன் அதையும் தாண்டி யாழ்ப்பாண மக்களுக்காக லலித் நிறையவே செய்தார்.

லலித் அங்குள்ள காணாமல் போனவர்களின் உறவினர்களை கொழும்பிற்கு அழைத்து வந்து காணாமல் போனவர்களை விரைவாக தேடும்படி அரசாங்கத்தை வேண்டினார். நீங்கள் சொல்லுவது வேறு அங்கு நிலைமை வேறு என்பதை லலித் ஊடகங்களுக்கு விளக்கினார். மனிதர்கள் தினம் தினம் யாழ்ப்பாணத்தில் கடத்தப்படுகின்றார்கள். பலரோ என்ன ஆனார்கள் என்று தெரியாது. அரசுக்கு எதிரானவர்கள் கடத்தப்பட்டு வதை செய்யப்பட்டு கொலை செய்யப்படுகின்றார்கள் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் பெரும்பான்மையானோர் தமிழர்கள் ஆனால் தமிழர்கள் அனைவருமே புலிகள் அல்ல என்பதை லலித் தெளிவாக எடுத்துரைக்கின்றார் .

இவ்வாறாகாக லலித் யாழ்ப்பாணத்திற்கு பல தடவைகள் மனிதர்களைத்தேடி பயணத்தை மேற்கொண்டிருந்தார். பல இயக்கங்கள் ஆயுதம் வைத்துக்கொண்டு செய்ய முடியாமல் போனதை லலித் தனி மனிதனாக செய்தார். நிறையவே செய்யவும் முனைந்தார். லலித் மனதத்தின் உயிர நாடி.

---

6 ம்பக்க தொடர்ச்சி

**அழிவின்..**

நாளை அணுக்கழிவுகள், விச இரசாயனக் கழிவுகள் மருத்துவக்கழிவுகளை எங்களது முற்றத்திலேயே வெட்டிப் புதைக்கும் ஒப்பந்தங்களில் எங்கள் நாட்டு எடுபிடி அரசுகள் கையொப்பமிடும் காலம் வரும்வரை நாங்கள் கைகட்டி நிற்கப் போகின்றோமா?

இலாபவெறி என்றும் மனிதர்களை பொருட்படுத்துவதேயில்லை.மக்களது உழைப்பை உறிஞ்சுவதற்கு மக்களைத் தயார் படுத்துவதைத் தவிர மனிதர்களுக்கு வேறு மதிப்புதரப்படுவதில்லை.இவ்வாறானவர்களின் கைகளில் சிக்கிக் கொண்ட அனைத்து விஞ்ஞான கண்டுபிடிப்புகளும்பயன்பாடாவது, இலாபவெறிக்கும் மூலதனங்களைக் கொள்ளையிடும் போர்களுக்குமே என்பது இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானில் போடப்பட்ட அணுக்குண்டுகள் விளைத்த அழிவுகள் சாட்சி.

விஞ்ஞானம் போருக்கும் போட்டிக்கும் மூலதனக் கொள்ளைக்கும் இலாபத்துக்கும் என்றில்லாமல்,மக்களுக்கு நன்மையளிக்கும் பயன்பாட்டைப் பெற்று உறுதிப்படுத்தப்படும் ஜனநாயக சமூகத்தின் கைகளில் சேரும்வரை, விஞ்ஞானத்தைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் அழிவுச் சக்திகள் நிர்மாணிப்பவை எவையும் மக்களை வஞ்சிப்பவையாகவே இருக்கும்.

சென்னையில் கல்பாக்க அணுமின்னிலையம் மக்கள் வாழும் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது மட்டுமல்லாமல் உலகின் மிக ஆபத்தான அணுவுலைகளில் ஒன்றாக இருக்கின்றது. அணுவுலையின் வெப்பவிருத்தியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உபயோகமாகும் குளிர்விக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அற்ற அணுவுலையாக இது இருக்கின்ற வேளையில்,இந்த கூடங்குளம் அணு மின்னுலை கூட மக்கள் செறிந்த பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு அந்த அணுவுலையைக் குளிர்விக்கும் தண்ணீரை (கதிர்வீச்சுடைய) நாளாந்தம் வருடம் முழுதும் தொடர்ச்சியாக கடலில் பாய்ச்சுவார்கள். அந்த மாசடைந்த நீர் கடல்வாழ் உயிரினங்களான மீன்களையும் தாவரங்களையும் நேரடியாகப் பாதிக்கும். அதேவேளை அந்த உணவுச் சங்கிலியில் இருக்கும்,அவற்றை உட்கொள்கின்ற உயிரிகள் முதல் மனித சந்ததிகளை அதே சம கடற்பரப்பில் அடுத்த கரையில் இருக்கும் இலங்கையினைப் பாதிக்கும் என்பதனை இலங்கை அரசு கவனத்தில் எடுக்கப் போவதில்லை.

இயற்கை அனர்த்தங்களான நிலநடுக்கம் சுனாமி எரிமலைக் குழம்புகள் போன்றவை ஏற்படக் கூடிய புவியியல் சாத்தியம் கொண்ட இடமாக கூடங்குளத்தை பூகோள விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். இவற்றுக்கெல்லாம் பாதுகாப்பாக கூடங்குளம் இல்லையே!

இந்தக் கூடங்குளம் மட்டுமல்ல இன்னும் பலவித தீங்குகள் பற்றி அக்கறைப்பட எங்கள் சொந்த அரசுகளை நம்பியிருக்க முடியாது.

புறப்படுவோம்!

போராட்டம் எமது கைகளில்!

வீதிகளை நாங்கள் அணிவகுத்து நிறைத்தாலொழிய எமது விதிகளை வேறு யாரும் இயக்கும் நிலையிலிருந்து மீள முடியாது.

4 ம்பக்க தொடர்ச்சி

**விஜய..**

என்று கூறி படுகொலைகளின் வரலாறு மூடி மறைக்கப்படுகிறது. மீண்டும் அவரது குரலை கேட்போம்.

” அந்தக்காலத்தில் இந்தப் பகுதிக்கு கஜபா ரெஜிமென்ட் தான் பொறுப்பாக இருந்தது. முதலில் மேஜர் குணதிலக இருந்தார். பின்னர் நிலைமைகள் பாரதூரமானபோது கோடாபய ராஜபக்ஷ வந்தார். முகாமுக்கு பொறுப்பாக இருந்தவர் மொஹான் விமலசூரிய என்ற அதிகாரி. அவர் கொடூரமான முறையில் மனிதர்களைக் கொன்றார். மொஹான் விமலசூரிய, குமாரசிங்க

என்றழைக்கப்படும் வங்கி அதிகாரியை பிடித்துக் கொண்டுவந்து அவரது காதை வெட்டி, எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க சாப்பிட்டுக் கொண்டிருந்த உணவுத்தட்டில் போட்டார். துண்டிக்கப்பட்ட தலைகள் விஜய வித்தியாலயத்தின் பின்புறம் குவிக்கப்பட்டிருந்தது. உடல்கள் வெளியே கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக பின்னர் அறிய முடிந்தது. விஜய வித்தியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களைப் பார்ப்பதற்கு வாரத்துக்கு ஒரு முறை கண்டி செஞ்சிலுவை சங்கத்திலிருந்து வருவார்கள். அவர்கள் வருவதற்கு முன்தினம் இரவில் சிலரை மெக்டொவல் தோட்டத்திற்கு கொண்டு சென்று கொன்றார்கள்.

போஸிலீன் கட்டிடமொன்றில் போலிஸ் பிரிவொன்று செயற்பட்டு வந்தது. அதற்கு பொறுப்பாக இந்தவர் ஏ.எஸ். பீ. பாலசூரிய. அவர் பிடித்து வந்த ஒவ்வொரு மனிதனையும் கொன்றார். கற்கலால் தலையில் அடித்தும் மனிதர்களைக் கொன்றார். கை கால் கட்டி தண்ணீர் தாங்கிகளுக்குள் போட்டும் கொன்றார். அப்படியாக படுகொலை செய்யப்பட்ட மனிதர்களின் உடல்களை கொளுத்தவில்லை. இடத்துக்கிடம் புதைத்தார்கள். இப்போது தோண்டப்படுவது அந்தப் புதைகுழிகள்தான்.

’திறந்த பொருளாதாரம்’ என்ற நாமகரணத்தோடு அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியினால் இலங்கை மக்கள் மீது சுமத்தப்பட்ட நவ தாராளமய முதலாளித்துவத்தையும், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மட்டுமே மாற்றமுடியாத, சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட சர்வாதிகார ஆட்சியையும் எதிர்த்துப் போராடிய ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் அரச படைகளால் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். பலபேரது உடல்கள் பாதையோரங்களில் வீசப்பட்டிருந்தன. சிலர் எங்கே , எப்படி புதைக்கப்பட்டார்கள் என்றே தெரியவில்லை. புதை குழிகள் இப்போதுதான வெளிவரத் துவங்கியுள்ளன. “உம்.. என்றால் வனவாசம். ஏன்.. என்றால் சிறைவாசம்” என்றுதான் படித்திருக்கிறோம். ஆனால் இப்போது உம்.. என்றால் வதை முகாம். ஏன்.. என்றால் புதை குழியாக இருக்குமோ?

www.padippakam.com





பேட்டி

கேள்வி: யுத்தம் முடிவடைந்து 3 வருடங்கள் கடந்து விட்டன. யுத்தம் முடிந்த கையோடு வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிமைகளை பெற்றுத்தருவதாக அரசாங்கம் கூறியது. அந்த வாக்குறுதி நிறைவேறியுள்ளதா?

ஜுட்: வடக்கு கிழக்கு மகளுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுப்பதாக கூறிய அரசாங்கம், உரிமைகளுக்குப் பதிலாக மக்களுக்க மிலிடரி மாதிரியான ஆட்சியைக கொடுத்திருக்கிறது. தொடர்ந்தும் தமிழ் மக்களை அடிமையாக்கி வைத்துக் கொண்டு தமது இனவாத அரசியல் நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்வதற்காக யுத்த வெற்றியை பயன்படுத்தி வரும் அரசாங்கம், தமிழர் என்ற காரணத்தாலேயே இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் மீது தொடுக்கப்பட்டு வரும் விஷேட அடக்குமுறை வேலைத் திட்டம் பாரதூ ரமானதாகும். யுத்தம் நடைபெற்ற விதத்தை ஆராய்ந்து பார்த்தால் அந்தக் காலகட்டத்தில் குடியிருந்த மக்கள் எறிகணை தாக்குதலுக்கு அஞ்சி தம்முடைய வீடு வாசல்ளைக் கைவிட்டு

டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களை தமிழர்களின் தலைவர்களாக அரசாங்கம் முன்னிலை படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் கே.பியைக் கூட மேடைக்கு அழைக்க அரசாங்கம் முதயாராகி வருகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இந்த தலைமையை ஏற்றுக் கொள்கிறார்களா?

ஜுட்: நிபந்தனையில்லாமல் முதலாளித்துவ அரசாங்கத்தின் மடியில் அமர்வதற்கும் முதலாளித்து நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றபடி எதையும் செய்வதற்கும் விருப்பத்துடன் தயாராக இருக்கும் சிலரை தமிழ் மக்களின் தலைவர்களாகக் காட்ட அரசாங்கம் முயற்சி செய்கிறது. அரசாங்கத்தினது இவ்வாறான அரசியல் குழுக்களினதும் அரசியல் நடவடிக்கைகளுக்காக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் இராணுவத்தைக் கொண்டு பலவந்தமாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அந்தத் தலைமையை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

கேள்வி: தமிழ் மக்களின் தலைவர்களாக தமிழ் தேசியக் கூட்டணி முன்னிலை பெறுகிறது. நீங்கள் அவர்களையும் விமர்சிக்கிறீர்கள்.இந்த

# சிஸ்டத்தை ம
# உரிமையைப்

## சம உரிமை இயக்கத்தின் அமைப்பாளர் ஜுட் சி

10-15 மைல்களுக்கு அப்பால் சென்று தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழத் தலைப்பட்டார்கள். அந்த இடங்களுக்கு அருகிலும் எறிகணைகள் விழத் துவங்கியதால் தற்காலிக கூடாரங்களை சுருட்டிக் கொண்டு மேலும் 10-15 தொலைவுக்குச் சென்றார்கள். இவ்வாறு இடத்துக்கிடம் மாறிய மக்களில் பெரும்பாலோனோர் உயிரிழந்தார்கள். இறுதியாக புதுக் குடியிருப்பு, புதுமாத்தளன் பகுதிகளில் இடம் பெயர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். புதுக் குடியிருப்பு மக்களின் வாகனங்கள், டிராக்டர். மோட்டார் சைக்கிலள், துவிச்சக்கர வண்டி ஆகியன குவிக்கப்பட்டு கொளுத்தப்பட்டு இற்றுப் போய்க் கொண்டிருப்பதை இன்று கூட காண முடியும். இவ்வாறு இடம் பெயர் முகாம்களில் ஓரிரு வருடங்கள் வாழ்ந்த மக்களில் ஒரு பகுதியை தாம் வாழ்ந்த இடங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடங்களில் வீடுகளோ, கிணறுகளோ, கழிப்பிடங்களோ இல்லை. அவைகள் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன. சிலரது காணிகளை இராணுவம் கைப்பற்றிக் கொண்டுள்ளது. சிலர் வாழ்வதற்குத் தகுதியில்லாத காட்டுப் பகுதிகளில் கைவிடப்பட்டுள்ளார்கள். மீள் குடியேற்றம் என்பது இந்த லட்சணத்தில்தான் உள்ளது. பெற்றார்கள், உறவினர்கள், நண்பர்கள், தமக்கு நெருக்கமானவர்கள் .ல்லாமலாக்கப்பட்டுள்ளமை, இருப்பிடங்கள் இல்லாமலாக்கப்பட்டுள்ளமை, மனோரீதியிலான வீழ்ச்சி, வாழ்க்கை சிதைவு, கடுமையான இராணுவமயத்துக்கு மத்தியில் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு அரசாங்கத்தினி ஒத்துழைப்போ, நியாயமான தலையீடோ கிடைப்பதில்லை. யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் சமூக வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை, கலாச்சார வாழ்க்கை ஆகியவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஆகக் குறைந்த தலையீடைக் கூட செய்யாத அரசாங்கம், மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் என்று நம்பிக்கை வைக்க முடியாது..

கேள்வி: தமிழ் மக்களின் தலைவர்களாக பிள்ளையான், கருணா,

விமர்சனத்துக்கு அடிப்படை என்ன?

ஜுட் : தமிழ் தேசியக் கூட்டணி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான இந்தியா உள்ளிட்ட வல்லாதிக்க நாடுகளின் தலையீட்டையே எதிர்பார்க்கிறது. தமது பொருளாதார, அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தேவைப்படுகிறது. இந்திய அரசாங்கம் கூட தமது பிராந்திய அரசியல் பலத்தை நோக்கமாகக் கொண்டே தமிழ் மக்களின் பிரச்சினையை முகாமைத்துவம் செயகிறது. இவ்வாறாக இந்தியா உள்ளிட்ட வல்லாதிக்க நாடுகள் விடயத்தில் நம்பிக்கை வைத்து செயல்டுவதால் தமிழ் முதலாளித்துவ கனவான்களின் அரசியல் இருப்பை மட்டுமே உறுதி செய்ய முடியும். ஒடுக்கப்பட் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை.

கேள்வி : சம உரிமைகள் இயக்கம் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது? அதில் பங்கேற்பவர்கள் யார்?

ஜுட் : பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் சிங்கள, தமிழ் முஸ்லிம் என்ற வகையிலும் இன தனித்துவங்களுக்கு ஏற்பவும், மத அடையாளங்களுக்கு ஏற்பவும் மக்களை பிரித்து வேறாக்கி ஆட்சி செய்தார்கள். முதலாளித்துவ ஆளும் வர்க்கம் ஒருமுறை சிங்கள இனவாதத்தையும் , மறுமுறை தமிழ் இனவாதத்தையும், மேலுமொரு முறை முஸ்லிம் இனவாதத்தையும் தமது ஆட்சியின் தேவைக்காக வரலாறு பூராவும் பயன்படுத்தி வந்ததன் விளைவாகத்தான சிங்கள தமிழ் முஸ்லிம் உயிர்கள் ஆயிரக்கணக்கில் காவு கொள்ளப்பட்ட மூன்று தசாப்த கால யுத்தத்துக்கு வழிவகுக்கப்பட்டது. அதனால் இன்றும் கூட சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்துக்குப் பின்னரான கடந்த காலங்களில் முதலாளித்துவ அரசாங்கத்தினால எடுக்கப்பட்ட நடவடிக்கை மூலமாகவும் மக்கள் ஒருவரையொருவர் முறைத்துக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இனவாத யுத்த வெற்றிகள் எப்போதுமே தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு அல்லாமல், முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு மாத்திரம் வெற்றிகளை கொடுத்திருப்பதை சொல் வேண்டியதில்லை. இந்த பின்னணியல் தேசிய தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் அரசியல் காரணமாக உண்மையான வர்க்கப் பிரச்சினை அடிபட்டு இன மற்றும் மத தனித்துவங்களை முன்னிலை படுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளும் போராட்டத்துக்குள் ஒடுக்கப்பட்ட மக்கள் சிக்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறாக நடைமுறையிலுள்ள பிற்போக்குத்தனம் காரணமாக சிங்கள, தமிழ், முஸிலிம் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகள் என்று அறிந்துக் கொள்வது, அனைத்து ஒடுக்கப்ட்ட மக்களுக்கும் மறுக்கப்பட்ட உரிமைகளையல்ல, தமது தேசிய தனித்துவம் சார்ந்தவற்றை பெற்றுக் கொள்வதைத் தான் அவர்கள் உரிமை என்று நினைக்கிறரார்கள். இதனால் மக்களின் உண்மையான பிரச்சினைகள் மறைக்கப்படுகின்றன. இப்படியாக

**சம உரிமை இயக்கத்தின் அடிப்படை நோக்கமாக இருப்பது, இந்நாட்டில் வாழும் அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் தேசியப் பிரஜைகளுக்கு எல்லா விதத்திலும் சம உரிமைகள் இருக்க வேண்டும் கல்வியில், சுகாதாரத்தில், பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பில் மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதில் சம உரிமை கிடைக்க வேண்டும்.**

ஏற்பட்ட உயரிழப்புக்கள் மற்றும் சொத்தழிப்புக்களுக்காக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான இழப்பீடைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை ஏற்றுக் கொண்டு, அதற்காக நாங்கள் எல்லோரும் சேர்ந்து போராட வேண்டும். காணி மற்றும் ஏனைய சொத்துக்களை அரசாங்கத்தின் தலையீட்டோடு அபகரித்துக் கொள்வதற்கு எதிராகவும், விவசாயத்துக்கான நிலம், நீர், பசளை உள்ளிட்ட ஏனைய நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நாங்கள் எல்லோரும்

அவ்வாறான ஆபத்தோடு தான் நீங்களும் வடக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்கள். மக்கள் போராட்ட இயக்கத்தின் லலித் மற்றும் குகன்



# ாற்றி சம பெறுவோம்

## ல்வா புள்ளேயுடனான நேர்காணல்

உண்மையான வர்க்க பிரச்சினை அடிபடுத்திவிட்டு சிங்களவனுக்கு எதிராக தமிழன், தமிழனுக்கு எதிராக சிங்களவன் என்ற வகையில் உண்மையான வர்க்க முரண்பாட்டை வேறுபக்கம் திருப்பப்பட்டிருக்கிறது. உண்மையாகவே அனைத்து ஒடுக்கப்ட்ட மக்களும் தமது வர்க்கத்தின் உரிமைகளை வென்றுக் கொள்வதற்கு ஒன்று சேர்வதாயிருந்தால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சம உரிமையை பெற்றுக் கொள்ளும் போராட்டத்தை துவங்க வேண்டும். சம உரிமை இயக்கத்தின் அடிப்படை நோக்கமாக இருப்பது, இந்நாட்டில் வாழும் அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் தேசியப் பிரஜைகளுக்கு எல்லா விதத்திலும் சம உரிமைகள் இருக்க வேண்டும் கல்வியில், சுகாதாரத்தில், பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பில் மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதில் சம உரிமை கிடைக்க வேண்டும். அதாவது இனம், மதம், மொழி, குலம் அந்தஸ்து என்ற வசையில். அதற்காக ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைத்து மக்கள் தொகையில் குறைந்த விகிதாரத்தைக் கொண்டுள்ள மிழ் முஸ்லிம் உள்ளிட்ட ஏனைய தேசியப் பிரஜைகளுக்கும் சமஉரிமைகளைப் வென்றெடுக்கும் போராட்டத்தைத் துவங்க வேண்டும்.அதனை வெறுமனே வார்த்தைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல், இனவாதத்தைத் தோற்கடித்து, ஒடுக்கப்பட்ட தேசிய மக்களுக்கான சம உரிமைகளை வென்றுக் கொள்வதற்காக போராடுவதே எமது நோக்கமாக இருக்கிறது. மட்டுமல்லாமல், உரிமைகளுக்காக உண்மையாகவே போராடும் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களின், புத்தி ஜீவிகளின் மனிதநேயர்களின் மத்திய நிலையமாக இதனைக் கட்டியெழுப்ப வேண்டும்.

கேள்வி ˙ எதிர் காலத்தில் சம உரிமை இயக்கம் என்ற வகையில் இனவாதத்தை ஒழிக்கவும், மக்களுக்கு சம உரிமையை வழங்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எத்தகையதாக இருக்கும்?

ஜூட் :முதலாவதாக யுத்தத்தினால் நாசமாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். யுத்தத்தினால் சேர்ந்து போராட வேண்டும். சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளினதும் தகவல்களை அவர்களது உறவினர்களுக்கு வெளிப்படுத்துவதோடு, அவர்களை உடனே விடுதலை செய்து கொள்வதற்காக அரசாங்கத்தை நாங்கள் வற்புறுத்துகிறோம். இவ்வாறாக வடக்கு கிழக்கு மக்களின் அழிக்கப்பட்ட பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களோடும் சேர்ந்து போராடுவது எங்களது நோக்கமாக இருக்கிறது.

மலை நாட்டு மற்றும் கீழை நாட்டு இறப்பர் தோட்டங்களை அண்டி வாழும் தமிழ் தொழிலாளர் மக்களுக்கு உண்மையான குடிமகனுக்குறிய அடிப்படை உரிமைகள், அதாவது. வீடு, கல்வி, சுகாதாரம், நியாயமான சம்பளம் ஆகிய வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த மக்களோடு சேர்ந்து போராடவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் சிங்கள இனவாத நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய பல்வேறு செயற்பாடுகளை நாங்கள் பார்க்கிறோம். முஸ்லிம் பள்ளிவாயல்களை உடைப்பதற்காக சிங்கள மக்களை தூண்டுதல், முஸ்லிம் வியாபாரிகளின் கடைகளில் பொருட்களை வாங்காதிருக்குமாறு வற்புறுத்தும் விதத்தில் தர்ம போதனை செய்தல் போன்ற செயல்களை நாங்கள் காண்கிறோம். இது பௌத்த பிக்குகளின் தனிப்பட்ட நோக்கமல்ல, அரசாங்கத்தின் குறுகிய இனவாத அரசியல் நோக்கத்துக்காக மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாகும் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இங்கே உண்மையான அரசியல் எதிரியை அறிந்து, முஸ்லிம் மக்களோடு சேர்ந்து அதற்கெதிராகப் போராடுவதும் எங்களது நோக்கமாக இருக்கிறது.

˙இவ்வாறாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களோடு சேர்ந்து˙இனவாதத்தை தோற்கடித்து சம உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக போராடுவோம்.

கேள்வி : வடக்கில் பாரிய அடக்குமுறையொன்று நிலவுகிறது. ஆகியோர் கடத்தப்பட்டார்கள். இது வரை அவர்கள் பற்றிய தகவல் இல்லை. இந்த நிலைமையில் நீங்கள் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் என்ன?

ஜூட் : யுத்தம் முடிந்து சில வருடங்களாகிவிட்டன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்இராணுவமய ஆட்சியே நடைமுறையில் இருக்கிறது. தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் வதை செய்வதற்கும் பொதுவான சட்ட திட்டங்கள் நீதி தர்மங்கள் அரசாங்கத்துக்குத் தேவைப்படுவதாகத் தெரியவில்லை. அதன் முழு உரிமையும் அரசாங்கப் படைகளின் கைகளிலேயே இருக்கிறது. அரசாங்கத்தின் உத்தியோக மற்றும் உத்தியோகப் பற்றற்ற ஆயுதக் குழுக்களின் ஊடாக நாடுபூராவும் செயல்படுத்தப்பட்டு வரும் காணாமலாக்கல் மற்றும் கடத்தப்படல் போன்றவற்றையும் தாண்டிய விஷேட நிலைமையொன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கிறது. யுத்தத்தின் வெற்றியை தொடர்ந்து ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை அடிமைகளாக வைத்துக் கொண்டு தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்களது இயலாமையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் அரசாங்கம், தமிழர் என்ற காரணத்தினாலேயே இந்தப் பிரதேச மக்கள் மீது தொடுக்கப்படடிருக்கும் அடக்குமுறை மோசமானதாகும். எல்டீடீயின் தோல்வி, தமிழ் மக்களின் தோல்வி என்று தெரியும் விதமாக செயல்படுவதன் மூலம் ராஜக்ஷ அரசாங்கத்தின் வர்க்க மற்றும் இனவாத கட்சி அரசியல் நோக்கத்தை சரியாக அறிந்துக் கொள்ள வேண்டும். நிரவாக நடவடிக்கைகள் மற்றும் சிவில் நடவடிக்கைகள் அனைத்தையும் பாதுகாப்புப் படைகளே செய்கின்றன. வடக்கு மற்கும் கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்கள் அரசாங்கத்தினதும் அரசாங்கத்தின் அனுசரணையைப் பெற்ற அரசியல் குழுக்களினதும் அரசியல் நடவடிக்கைகளுக்காக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை ராணுவம் பலவந்தமாக அழைத்துச் செல்வதோடு, வேறு அரசியல் குழுக்களுக்கு அரசியலில் ஈடுபடும் ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்கு அடக்குமுறையைக் கையாள்கிறது. வடக்கில் யுத்தம் முடிவடைந்த கையோடு ஒடுக்கப்பட்ட மக்களோடு கைகோர்ப்பதற்காக தெற்கிலிருந்து வந்த தோழர் லலித்தும், அதற்காக வடக்கிலிருந்து வேலை செய்த தோழர் குகனும் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளால் கடத்தப்பட்டார்கள். இது தான் அரசாங்கத்தின் உண்மையான தந்திரம். மக்களின் வாழும் சுதந்திரத்தையும், தான் விரும்பும் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமையையும் பெற்றுக் கொள்வதற்காக மக்களோடு சேர்ந்து எங்களுக்கிருக்கும் ஆகக் கூடிய ஜனநாயக உரிமைகளின் கீழ் போராட்டத்தில் ஈடுபட நாங்கள் தயாராக இருக்கிறோம். நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் அவ்வாறான செயற்பாட்டுக்கு சென்றுக் கொண்டிருக்கிறோம்.

கேள்வி ˙ நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக பெரும்பாலானவர்கள் மேற்கத்தைய நாடுகளையும், இந்தியாவையும் எதிர்ப்பார்த்திருக்கிறார்கள். அது குறித்து உங்களுடைய கருத்து என்ன?

ஜூட் : தமிழ் மக்களின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காக என்ற போர்வையில் வல்லாதிக்க நாடுகளும் இந்தியாவும் தமது அரசியல் நோக்கங்களுக்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏலம் போடும் செயலில் இறங்கியுள்ளன. தமிழ் நிலங்களை தமது பொருளாதாரத் திட்டங்களுக்காக விலைக்கு வாங்கும் இந்தியாவின் திட்டம் குறித்து சிறந்த உதாரணம், சாம்பூர் விஷேட பொருளாதார வலயம். அதே போன்று இந்தியா உள்ளிட்ட ஏனைய ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையை தமது அரசியல் நோக்கங்களுக்காக முகாமைத்துவம் செய்வதற்கு வற்புறுத்துவதற்கான ஆயுதமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை பயன்படுத்துகிறார்களேயன்றி, அவற்றைத் தீர்ப்பதற்காக தலையிடுவதில்லை. தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயிருந்தால் அவர்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்ந்து இருந்துக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் இந்தியா உள்ளிட்ட ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கம்.

www.padippakam.com



# கூடங்குளம் ஆபத்து குறித்து மன்னார் மக்களுக்கு விளக்கம்



கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் நவம்பர் 24ம் திகதி மன்னார் பேராயர் ராயப்பு ஜோசப் உள்ளிட்ட கிறிஸ்தவ மதத் தலைவர்களையும், மன்னார் முஸ்லிம் பள்ளிவாயலின் இமாம் உள்ளிட்ட மதத் தலைவர்களையும், மீனவர் அமைப்புக்கள், சமூக சேவை அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் மன்னார் நகரசபைத் தலைவர் உள்ளிட் உறுப்பினர்களையும் சந்தித்து கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு வரக்கூடிய ஆபத்து குறித்து விரிவான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டது.

இதன்போது கூடங்குளம் அணு உலையினால் ஏற்படப் போகும் ஆபத்து குறித்து நன்றாக விளக்கப்பட்டதோடு, அணு உலைக்கு எதிராக மக்கள் கருத்தொன்றை கட்டியெழுப்ப வேண்டிய தேவை குறித்தும் குறிப்பிடப்பட்டது. மேற்படி கலந்துரையாடல்களின் மூலம் விளக்கத்தைப் பெற்றுக் கொண்ட மதத் தலைவர்கள். மீனவர் தலைவர்கள், சமூக ஆர்வளர்கள், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கூடங்குள அணு உலையினால் ஏற்படப்போகும் ஆபத்து குறித்து கிராம மட்டத்தில் விளக்கமளிப்பதற்கு தயாராக இருப்பதாகக் கூறினார்கள்.

மாத்திரமல்லாது, இந்த ஆபத்து வடக்கிற்கு மாத்திரமல்ல முழு இலங்கையையும் பாதிக்கும் என்பதால், தென்பகுதி மக்களுக்கு விளக்கமளிப்பதற்காக தென் பகுதி மக்களை சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்கள்.

இச் சந்திப்பின் போது மக்கள் போராட்ட இயக்கத்தின் நடவடிக்கைத் தொடர்ப்பாளர் தோழர் துமிந்த நாகமுவ, மாவோவாத கம்யூனிஸக் கட்சியைச் சார்ந்த பூமியின் மைந்தர்கள் அமைப்பின் சுரேந்திர அஜித்,Greens For Change அமைப்பின் பிரசாத் மஞ்சுல அம்பலன்யாய, பூமியின் நண்பர்கள் சுற்றாடல் அபிவிருத்தி ஒன்றியத்தின் கருணாதாச மூனகம ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான இயக்கத்தின் சார்ப்பாக பங்கேற்றிருந்தனர்.

3 ம்பக்க தொடர்ச்சி

**நீதி விசார...**

நீதியரசரை விரட்டுவதற்காக குற்றவியல் நீதி விசாரணையை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருவதும்கூட நிறைவேற்று அதிகாரத்தைப் நீதி விசாரணை.....

பீடித்துக் கொண்டிருக்கும் குடும்ப ஆதிக்கம்தான் என்பது பரகசியமாகும். மறுபுறம், சட்டவாக்கச் சபையாலும் மக்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதில்லை. பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றவியல் நீதிவிசாரணைக்கு அரசாங்கத்தின் முன்வரிசை ஆலவட்டக்காரர்களின் உத்தரவின்படி 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டுள்ளதோடு, நாடாளுமன்றத்தின் பின்வரிசை ஆலவட்டக்காரர்களினால் பிரேரணை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவற்றைப் பார்க்கும் போது, நாடாளுமன்றம் குறித்து கூறப்பட்ட மாயாஜாலக் கதைகள் வெறும் கனவாக மாறி முழு சட்டவாக்கச் சபையும் அரச குடும்பத்தின் தேவைகளுக்காகவே செயல்படும் நிலை உருவாகயிருக்கிறது. அப்படியான சட்டவாக்கச் சபை மக்கள் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் என எதிர்ப்பார்ப்பது முட்டாள்தனமாகும். நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பில் இன்று பெரும்பாலானோர் கூக்குரலிட்டாலும், நீதிமன்றம் அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருப்பதோடல்லாமல் சுயாதீனமாக்கக் கூடியதொன்றல்ல. நீதி மன்றம் தோற்றி நிற்பது மக்களின் நிலைத்தலுக்காக அல்ல, அரசின் நிலைத்தலுக்காகத்தான் என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. கட்டுநாயக போராட்டத்தின் போது போலிஸ ாரினால் படுகொலை செய்யப்பட்ட ரொஷான் சானகவின் இறுதிச் சடங்குக்குக் கூட கட்டுப்பாடுகளை விதித்தல், தொழிலாளர் வேலை நிறுத்தம்- விவசாயிகள் சத்தியாக்கிரகம்- மாணவர் நடைப் பயணம் போன்றவற்றுக்கு தடைவிதித்தல் போன்ற அனுபவங்கள் சமீபத்திய உதாரணங்களேயல்லாது பழைய அனுபவங்களல்ல.

நீதிமன்றத்தின் சுயாதீனம் குறித்து கோஷங்களை எழுப்பிக் கொண்டு, நேரம் பார்த்து சுருட்ட வேண்டியதை சுருட்டிக் கொள்ளும் கொள்கைக்கு ஏற்ப மக்களை சர்வாதிகாரத்துக்கு எதிராக அணி திரட்ட முயற்சிக்கும் கட்சிகள் விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கிறது. இந்தச் செயற்பாடு கடும் போக்காகத் தோன்றினாலும், எதிர்காலத்தில அது பாதிப்பை ஏற்படுத்தும். இந்த துர்நாற்றத்திலிருந்து, இந்த அழிவிலிருந்து மக்களை மீட்டெடுப்பதை நீதிமன்றத்திடம் ஒப்படைக்க முடியாது. அரசாங்க அங்கங்களுக்கிடையில் தற்காலிகமாக பிறந்து மீண்டும் விரைவாக அமைதியடையும் இந்த மோதலின் அளவை கோடிட்டுக் காட்டும் சர்வதேச பாடசாலையாக பயன்படுத்துவதைத் தவிர இவற்றால் வேறு எந்தப் பிரயோஜனமும் இல்லை. இந்த அனைத்து சம்பவங்களையும் பார்க்கும் போது, அனைத்தையும் மொத்தமாக மாற்றினாலேயன்றி இந்த அழிவிலிருந்து மீள முடியாது என்பது தெரிகிறது. ஊடகங்கள் வாயிலாக பெருப்பித்துக் காட்டப்படும் சம்பவங்களுக்கு பதிலளிப்பதை விட அது குறித்து அறிவு ஞானத்தை சமூகமயப்படுத்துவது மிக மிக முக்கியமாக இருக்கும்.

1 ம்பக்க தொடர்ச்சி

**கூடங்குளம்..**

கூடங்குளம் அணு உலையிலிருந்து 500 கி. மீட்டருக்குள்ளேயே இலங்கை அமைந்திருப்பதனை சுட்டிக்காட்டிய தோழர் அஜித் குமார, சூழல் அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் இது குறித்து அரசாங்கத்திடம் விளக்கம் கேட்டபோதிலும் அவற்றிற்கு இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை எனவும் கூறினார்.

“நவ தாராளமாய முதலாளித்துவம் மக்களை உதாசீனப்படுத்திவிட்டு இலாபத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வருகிறது. இன்றைய அரசாங்கம் கூட தமது அதிகாரத்தையும் வரப்பிரசாதங்களையும் தவிர மக்களின் நல்வாழ்க்கைக்கு முக்கியத்துவமளித்து செயற்படுவதில்லை.” என்று கூறிய அவர், மனித உரிமை மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்படும் போது, தம்மை மின்சார நாற்காலியில் அமர வைக்கப்போவதாகக் கூறி, மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம் செய்யும் அரசாங்கம், 20 லட்சம் மக்களுடைய உயிர் ஆபத்தில் சிக்கப்போகும் நிலை ஏற்பட்டிருக்கும்போது மௌனமாக இருப்பது அவர்களின் நிர்வாணத்தைக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார். கடந்த நவம்பர் 20ம் திகதி நடந்த அணுவலு அதிகார சபையின் அமர்வொன்றின்போது, இந்த விடயத்தில் இலங்கையின் ஆற்றல் குறைவாகவே இருப்பதாக அமைச்சர் சம்பிக ரணவக குறிப்பிட்டமையையும் அஜித் குமார கடுமையா விமர்சித்தார்.

1 ம்பக்க தொடர்ச்சி

**நீதிமன்ற நெருக்கடியை**

நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் ரீதியில் தன்னோடு உடன்பாட்டுக்கு வராதவர்களை பலிவாங்குவதிலும், துன்புறுத்துவதிலும் ஈடுபட்டிருப்பதன் வெளிப்பாடுதான் இந்த குற்றவியல் விசாரணை எனக்கூறிய வருண ராஜபக்ஷ, கடந்த காலம் பூராவும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், மீனவர்கள், இளைஞர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், வடபுல மக்கள் உள்ளிட்ட பொது மக்கள் எதிர் கொண்ட அடக்குமுறையோடு தொடர்புபடுத்தி இந்த சம்பவங்களை பகுப்பாய்வு செய்ய வேண்டும். நவ தாராளமய முதலாளித்துவத்தை செயற்படுத்தும்போது, அரசாங்கத்திற்கு அடக்குமுறையைத் தவிர வேறு ஆயுதம் கிடையாதென்பதை அனுபவங்களின் மூலம் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த தான்தோன்றித்தனத்தைத் தோற்கடித்து ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் போராட வேண்டும். தமக்கு எதிரான சக்திகளை பயமுறுத்தி அடக்குவதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை நாங்கள் எதிர்த்தாலும்கூட, நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாத்தல் அல்லது பிரதம நீதியரசரை மீட்டுக் கொள்ளல் போன்றவை, எல்லா பிரச்சினைகளுக்கும் தீரவாக இருக்கும் என்ற மாயயை பகிர்ந்துக் கொள்வதற்கும் நாங்கள் தயாராக இல்லை எனக் கூறியதோடு, நீதி மன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்கச் சபை ஆகியவற்றின் சுயாதீனத்தையும், முதலாளித்துவ அரசின் அதிகாரபலத்தினது சுயாதீனத்தையும் எதிர்பார்க்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

12 ம்பக்க தொடர்ச்சி

**ஊமை நெஞ்சம்..**

என் கதை இன்னும் முடியேல்லை. இது தான் என்ரை வீடு. அவன் திறப்பை எடுக்க அதிக நேரம் தேவைப்பட்டது.

உள்ளே நுழையும் போது.., அறை மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் இருந்தது. இன்றுதான் நேர்ஸ் வந்து போனவள். இதிலே இரு எனக்காட்டி விட்டு அங்கிருந்த கபேட்டின் மேலிருந்த ஹான்ட்பாக் ஒன்றைக் கீழிறக்கி அதிலிருந்த கடிதமொன்றை எடுத்தான். என்னைப் பார்த்தவனாய் கைகள் நடுங்கியடியே அதை நீட்டி, இதைப்படி என்றான்.

வித்தியா இல்லை என்ற செய்தி கேட்டு கொஞ்சநாளின் பின்னர் கிடைத்த கடிதம்.

எனக்கு பயமாகவும் நடுக்கமாகவும் இருந்தது. மெல்ல விரித்து படிக்கத் தொடங்கினேன்.

அன்புடன் உயிர் கயனுக்கு

கடவுள் துணையால் இக்கடிதம் எப்போதாவது உங்கள் கையில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன். நான் என்ன பழி செய்தேனோ தெரியாது. நரகம் என்றால் என்ன என்பதை ஒவ்வொரு நாளும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். இந்தக ் கடிதம் உன் கையில் கிடைப்பதற்கு முன்னர் நான் உயிரோடு இருக்கமாட்டேன் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

என்னோடு வேறு சில தமிழ்ப் பெண்களும் சில ஆண்களும் வந்திருந்தனர். ஆனால் இப்போ அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை.

இங்கே ஒரு பழைய பண்ணை போன்ற இடத்தில் ஒரு நிலவறையில், சிறையில் இருப்பது போல் அடைக்கப்பட்டிருக்கிறேன். பெயர் தெரியாத மொழி தெரியாத ஆட்களின் இச்சைகளுக்காக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவும், துன்பப்படுத்தப்படுகின்றேன். எப்போதாவது வந்து போன தமிழ் ஏச்என்சிக்காரனும் இவர்களுடன் ஒத்துப்போனால் இலகுவாய் உன்னிடம் வந்து சேரலாம் எண்டு புத்தி சொல்லியிருந்தான். இதுதான் என்று அப்போது தெரியவில்லை.

இன்னொருத்தரால் எச்சிப்படுத்தப்பட்ட நான் இனிமேல் உங்களுடன் வந்து எப்படி நிம்மதியாய், உண்மையாய் வாழமுடியும். அப்படி வந்து வாழ்ந்தாலும் கூட எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இந்தப் பிரச்சினை எழுந்தே தீரும். ஏன் என்றால் நீயும் கூட சாதாரணத் தமிழன் தானே நீயென்ன மொத்தத் தமிழ்ச் சமூகமே இதை ஏற்காது என்ற நினைப்பில் என்னை அழித்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்துள்ளேன்.

நிறைய எழுதவேண்டும் என நினைக்கிறேன். முடியாது.

எங்களுடைய நாட்டிலேயே சொந்த மக்களே பாதுகாப்பற்றும் உயிருக்குப் பயந்து வாழும் நிலையில் இருக்கும்போது நீ ஏன் இங்கே வந்தாய் என்று இங்கு வந்தவர்களில் ஒருவன் கேட்டான். அவன் மூலமாய்த்தான் இந்தக்கடிதத்தை அனுப்புகின்றேன்.

இப்படியே கடிதம் நீண்டு கொண்டு போக என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை.

கயனை என்னால் நிமிர்ந்து பார்க்க முடியாமல் இருந்தது.

நான் வெளிநாடெண்டு என்று வராமல் நாட்டிலேயே இருந்து செத்துத் தொலைத்திருக்கலாம். இல்லாவிட்டால் போராடியாவது எங்கள் நாட்டில் மடிந்து போயிருக்கலாம்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்க இப்பவும் இந்தச் சனங்கள் வெளியே வர வேண்டுமெண்டு அலையிறதை நினைக்க கவலையாகவும் வேதனையாகவும் இருக்கு. அவன் தலை நிமிராமலேயே சொல்லிக் கொண்டிருந்தான்.

ஒருவரின் துயரத்தையும் துன்பத்தையும் இன்னொருத்தரால் அதே விதமாய் உணர்ந்து கொள்ள முடியாதுதான். ஆனால் கயனின் துயரத்தையும் ஏமாற்றத்தையும் என்னால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடிந்தது.

வார்த்தைகளால் அவனை என்னால் தேற்ற முடியாது.

எமது போராட்டத்தின் இறுதிக் கணத்திலே மாட்டிக் கொண்ட எமது பெண் போராளிகள் போல் இவளும் இந்த மாபியாக் கும்பலிடம் மாட்டித் தவித்திருப்பாளோ?

அங்கே ஒரு இசைப்பிரியாவைப் போல், ஒரு அங்கையர்கன்னியைப் போல மற்றும் பெயர் தெரியாத ஊர்தெரியாத, ஏன் ? வயதே தெரியாத நாட்டுக்கெண்டும் விடுதலைக்காய் போய் மாட்டிக் கொண்ட என் சகோதரிகள் போல் இந்த வித்தியாவும் இங்கே மாட்டுப்பட்டிருப்பாள்.

இந்தப் புலம்பெயர்வு என்ற இருட்டுப் போர்வைக்குள், ஏச்என்சிக்காரர்கள் என்று தங்களை மறைத்துக் கொண்டு இவர்கள் செய்த அநியாயங்களினால் வித்தியா போன்ற எத்தனையோ பெண்கள் அனாதரவாய் கண்ணுக்கே தெரியாத இடங்களில் செத்து மடிந்து தொலைத்திருக்கிறார்கள்.

இவர்கள் எத்தனை பேரைச் சாகடித்திருப்பார்கள்.

கயனைப் போல இன்று எத்தனை இளைஞர்கள் வெளியிலே சொல்ல முடியாத மன நோயாளிகளாக

இன்னும் எத்தனையோ பேர் காசு கட்டி ஏமாந்தவர்களாக

என் மனம் கொதித்துக் கொண்டது. கயனைப் போல் என்னாலும் மௌனமாய் இருக்க முடியாது. இவர்களை எப்படியாவது அம்பலப்படுத்தியே ஆகவேண்டும் என்று எனது மனம் நினைத்துக் கொண்டது.

அவனை நான் அணைத்தபடி வெளியிலே இறங்கினேன்.

காற்று வெறுமையாய் வீசிக்கொண்டிருந்தது.

**அடங்கியிருக்கலாமோ உன்ர விண்தோள்கள்.**

குறுக்கு கட்டோட விறுக்கென்று
மணலில் எட்டி நடக்கின்ற மீன்காரப்பெண்டு
குனிந்து மீன்கூடை இறக்கிவைக்கையில
மொய்க்கிற ஈயோடு அவளுடல் மேயும் உன் கண்கள்

கிழிசல்கள் பொத்தி முழுமேனி மறைக்காத
சீலை முகிலுக்குள் அவள் நிலவெனக் காண்பாய்
உன் புத்தி மயங்கியே வீணாய் அவள் பொழுதைப் பறிக்க
போகாதா அறா விலை கேட்டு மெல்ல உரசியே பார்ப்பாய்

செருப்பில்லாக்கால்கள் சீவாத கருங்கூந்தல்
சாயம் பூசாத சொண்டுகள் ஆனால் வண்டுக்கண்கள்
உடுக்கை அடித்தாலும் அகலாத பேயாக
உன் மனசுக்குள் குடிகொண்ட நடையாள்

சப்பாத்துக்காலோடு சிகரெட்டும் கையுமாய்
வெளிநாட்டால் வந்து
சம்மாட்டி வாங்குவான் மீன்கள்
அவன் உன்ன வைப்பாட்டியாக்க
வலம் வந்தான் என்கையில்
கத்தியிருந்த தில்லை அப்ப
தேப்பனைத் திண்ட பிள்ளையளோட
தாலியறுத்தவள் தாரத்தை திண்டவள்
தன்னந்தனியாக மீன்வித்தோ சீவியம் செய்வாள்?
அவளின்ர வீட்டுப் படலைல வீச்சுவலையோட
காட்டினர் பலவான்கள் தம் காதல் வித்தை!

மொண்டானும் கையில இல்ல பொறுக்கியள்
தலையிலபோட.
வெறும் கருவாட்டு விலையில்ல உன்ரகாதல்!

கோதாரி விழுவார் கொள்ளையிலபோவார்
உண்ணாணப்பிள்ளையள் வயிறாரத் தின்னாத
கொடுமைய
நண்டுப் பொறிக்குள்ளே இரையாக வைத்தார்.
பசிக்கண்ணீரைப் பெட்டைமேனிக்கு பன்னீராய்க்
காடாத்தச் சொன்னார்.

சூள்மீன் பிடிக்க வாள்விசுக்கின கையள்
கட்டுமரங் கட்டி அலையத்துளைச்சு
நுரையை ஆகாசம் வீசி அளந்த கண்கள்
அடங்கியிருக்கலாமோ உன்ர விண்தோள்கள்.

**முருகன்**

**அழாதே அம்மா**

அம்மா !
யுத்தக்களத்திலிருந்து
வாயில் நுரைதள்ள
மூச்சு இரைச்சலுடன்
தனியாக வரும் என் குதிரைக்கு
அம்மா!
தண்ணீர் கொடு !
அதன் முதுகைத்தடவி கொடு!
அது !
இன்னொரு வீரனுக்குப்
பயன்படட்டம் !
திரும்பி வந்த குதிரைமேல்
என்னைக் காணாமல்
கண்ணீர் சிந்தி
என் சவக் குழியை தேடாதே !
சுதந்திரம் அடைந்த இந்நாடு
உன் மைந்தனின்
இன்னுமொரு வடிவமன்றோ !




அவர்களின் பார்வையில்
எனக்கு-
முகம் இல்லை
இதயமும் இல்லை
ஆத்மாவும் இல்லை.

அவர்களின் பார்வையில்-
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன.
சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள் ஆகும்.

கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்.
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்.

**காத்திருப்போம்!**

நேற்று வரை
நடந்தவற்றை
திரும்பிப்பார்!

உனக்கும்
எனக்கும்
எனனதான் மிச்சமிருக்கு!

மாடி வீடும்
தங்க ஆபரணமும்
பிரயாணியுமா கேட்டோம்!

இல்லை, இல்லை
நாங்கள் கேட்டதெல்லாம்
சுதந்திரக்காற்றை சுவாசிக்க!

சமதர்ம
தேசத்தை கட்டி எழுப்ப
சரிநிகராக வாழ!

கந்தசாமியும்,
காதரும்,அப்புஹாமியும்
கைகோர்த்து வலம் வர!

ஒரு சமாதான
“தேசம்” கேட்கிறோம்
அதைத்தந்துவிட மறுக்கிறாய்!

இழப்பதற்கு
“உயிர்” மட்டுமே மீதமாய்
எங்களிடம் இருக்கின்றது!

நம்மவர் சிந்திய “ரத்தம்” தானே
எங்கள் தேசத்தின் “கங்கைகள்”
கங்கை பாய்ந்த இடமெல்லாம்

விளைவர் விடுதலை வீரர்கள்
புரட்சியாளர்கள் அதுவரை
காத்திருப்போம்!

**சந்த்ரு**

சோசலிசக் கவிதைகள்

எனக்கு ஆருயிர்க் காதலி
ஒருத்தி இருந்தால்
ஒரு இரவின் முடிவில் - அவள்
போலீஸ்காரர்களால்
படுகொலை செய்யப்பட்டாள்.

ஏ! காடே ! நீ என் ஆருயிர்க் காதலியாய் இரு !
நீயே என் மணப்பெண்.
என் இதயத்தின் அன்பு
வெளிச்சமிடுகின்றது ; வெள்ளமாய் ஓடுகிறது.
அந்தக் காதல் வார்த்தைகளை- நான்
எப்போழுதும் சொல்லத்துணிந்ததில்லை !
ஆனால்.... அருமைக்காடே !
உன் செவிகளில் மெதுவாக உச்சரிக்கிறேன்.

அந்தி மாலைகளில்
உன்றன் மரக்கிளைகள்
மெல்ல அசைந்து - பச்சை இலைகளால்
முத்தம் படாத என் இதழ்களைத்
தடவிக் கொடுக்கின்றன !

என் அம்மா-
அவளையும் இந்தக் கசடர்கள்
கருத்த இருட்டில்-எங்கோ...
தூக்கிச் சென்றார்கள்.
ஏ! காடே ! நீயே என்-
அன்பான ஆதரவான அம்மாவாக இரு !
அவனின் அரவனைப்பு இல்லாமல்
வாழவே இயலாது!
காலைப் பனித் துளிகளால்
வலிக்கும் என்
போர்க்கள விழுப்புண்களை
கழுவிக் குளிப்பாட்டு !
அணி வகுத்துச் செல்லும் போதும்
அபாயத்துடன் விளையாடும் போதும்
அன்பான உன் ஆசைப் பார்வையால்
கவனித்துக்கொள் !

எனக்கும்.... ஒரு
ஓட்டைக் குடிசை இருந்தது.
காற்று ஏந்தி வந்த
புகை மண்டலத்தால்- அது
சாம்பலாகிப் போனது!

ஏ ! காடே ! நீ என் குடிசையாய் இரு !
கயமையின் களங்கக் கரங்கள்
உன்னைத் தீண்டவே அஞ்சுகின்றன!
போராட்டங்களின் முடிவில்- அந்தக்
குழப்பமான இரவுகளில்
களைப்புற்று உன் மடிமீது அணைந்தபடி
தவழ்ந்து ஊர்கின்ற பொழுது
உன் கனத்த இலைகளால்
கட்டி அணைத்துக்கொள் !
உறங்கும் பொழுது பணிவிடை செய் !

எனக்கம் ஒரு தாயகம் இருக்கின்றது.
ஆனால்.... கொடுங்கோலர்களின் கீழ்
அடிமையாய்,
துண்டாடப்பட்டு
உடைந்து கிடக்கிறது.

ஏ! காடே ! நீ என் புகலிடம் !
ஆனால்...
என் நெஞ்சில் இருக்கும் தாயகமாக
நீ ஆக முடியாது
நாங்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

அம்மாவை விட
அன்பு மனைவியை விட
அழகுக் குடிசையை விட
அன்னை பூமியை
அளவு கடந்து நேசிக்கிறோம் !

ஏ! புரட்சிக்காடே ! எங்களைப் பாதுகாத்திடு !
எங்களைக் கவனித்துக் கொள் !
தாயகத்திற்காக - அந்தச்
சாவையும் சவாலுக்கு அழைப்போம் !

**டோப்ரி ஜோடாவ். ரஸியக் கவிஞரின் கவிதை தமிழாக்கம்**

www.padippakam.com



பால் வைச்சு தண்ணியும் வாத்து பிள்ளை குளிச்சிட்டும் வந்திட்டுது. இனிமேல் பிள்ளை வெளிக்கிட்டு வெளியாலவர எப்பிடியும் குறைந்தது ரு மூண்டுமணித்தியாலம் எண்டாலும் எடுக்கும். சொந்த பந்தங்கள் எண்டு நிண்ட சனங்களும் திருப்பி வெளிக்கிடவெண்டு வீடுகளுக்குப் போனதாலேயும், வீடீயோ அண்ணையும் கோலை ஒருக்கா படம் பிடிக்க போனதாலேயும், மேக்கப்புக்காரியும் பிள்ளையின்றை அம்மாவும், நானும் தான் வீட்டில தனியா நிண்டோம்.

எனக்கு பொழுது போகாதபடியால் அங்கு மேசையில் இருந்த சில விளம்பரப் பேப்பர்களை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு மனிசன் மெல்லெனக் கதவைத் திறந்து அடிக்குமேல் அடிஎடுத்து.., கிட்டத்தட்ட ஒரு வெறிகாரன் போல பக்கத்திலிருந்த கதிரையையும் பிடித்து நடந்து வந்து, மூச்சையிழுத்துக் களைப்பாறுவது போல், சாடையாக என்னையும் பார்த்துப் புன்னகைத்தபடி முன்னிருந்த சோபாவில் அமர்ந்தார்.

என்னடா இந்த மனுசன் விடிக்காலையிலேயே வெறியுடன் வந்திருக்கிறாரே எண்டு மனம் சங்கடப்பட்டுக் கொண்டது.

அந்தவீட்டுக்கார மனுசியும் ஆ... கயனண்ணை இந்தாங்கோ□பலகாரம் சாப்பிடுங்கோ தேத்தண்ணி குடியுங்கோ எண்டு ஒரு பலகாரத் தட்டையும் தேத்தண்ணியையும் முன்னால் வைத்து விட்டு நகர்ந்து விட்டாள்.

எனக்குஅவரைப் பார்க்கும் போது எங்கேயோ பார்த்த முகம் போல இருந்தாலும் உடனே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அண்ணை நீங்களும் பலகாரம் சாப்பிடுங்கோவன் என்று என்னைப்பார்த்துக் கேட்க,நானும் இப்பதான் சாப்பிட்டனான் எனச் சொல்லி மறுத்துவிட்டேன்.

அவர் கொஞ்சம் குனிந்து, தட்டிலிருந்த பலகாரத்தை எடுக்கஅவர் பட்ட கஸ்ரத்தை என்னால் பார்க்க முடியாமல் இருந்தது. கைவிரல்கள் நடுங்கியபடியே அதை எடுத்து வாயில் போடும்போது அவர் பட்ட அவஸ்தையும் அதற்கெடுத்த நேரமும் அவர் வெறியில் இல்லை. அவர் ஒரு சுகமில்லாதவர் என்பதை என்னால் தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருந்தது.

நான் பார்த்த பேப்பரை வைத்துவிட்டு உங்களுக்கு என்னபெயர் எங்கே இருக்கின்றீர்கள் எனக் கேட்க, ஒருகொஞ்சத் தூரத்திலேதான் இருக்கிறன், தன்ரை பெயர் கயேந்திரன் என்றும், கயன் எண்டு கூப்பிடுவினம் எண்டு சொல்லிப் போட்டு,எ ன்னையும் விசாரித்தார்.

அவர் கதைக்கும்போது தலையும் சேர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

நான் இங்கே படமெடுக்கவந்தனான் என, நான் இருந்து வந்த சிற்றியின் பெயரையும் சொன்னபோது, அப்ப என்னைத் தெரிந்திருக்கவேண்டுமே..? நான் அப்போது உங்கடை இடத்துக்குப் பக்கத்திலுள்ள சிற்றியிலேதானே புட்போல் விளையாடினனான் எண்டும், கயன் எண்டால் என்னைக் கனபேருக்குத் தெரியும் எண்டும், ஒருபெருமிதச் சிரிப்போடு அவர் சொன்னபோது எனக்கு வியப்பாகவும்,பெரும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

அந்தக் கயனா..,நீங்கள்..! ஆம் என்று ஒருகுழந்தைபோலச் சிரித்தார்.

என்ரை மனம் ஒருகணம் ஆடி அடங்கி நின்றது.

அந்தக் கயனா..? அவனா இவன்..!? அவன் எங்கே..!இவன் எங்கே..!? அவனின் அந்த அழகுத் தோற்றம், கம்பீரம், ருவிளையாட்டு வீரனுக்கான அந்த ஸ்ரையில் எங்கேயெல்லாம் மறைந்து போனது?

ஆனால் இவனோ..,முகமெல்லாம் அதைச்சு கண்களெல்லாம் உள்ளேபோய் முதுகும் வளைந்து கூனிக்குறுகிப் போய்..,.

கயன் அப்ப என்னையும் தெரிந்திருக்கவேணுமே..? அப்போ எங்களுடைய சிற்றிக்காக நானுந்தானே விளையாடியவன்.ஞாபகம் இருக்கா என்று கேட்டபோது

கண்களைக் கசக்கியபடியே, என்னபெயர் சொன்னீங்கள் என்று திரும்பக் கேட்டு யோசித்தபடி..,அப்போ பாட்டெல்லாம் பாடுறவன் நீதானே என்று கேட்க நானும் தலையாட்ட, அவன் முகத்திலே அளவில்லா ஆனந்தத்தைக் காணக்கூடியதாய் இருந்தது.

சிரமப்பட்டு எழுந்து என்னைக் கட்டிப்பிடிக்க முயன்றபோது நானே எழுந்து அவனை இறுக அணைத்துக் கொண்டேன்.

நாங்கள் இருவரும் மிகவும் நெருக்கமாகவும், நாளாந்தமும் பழகிய சினேகிதர்கள் இல்லை. விளையாடும் போது சந்தித்த நேரங்களிலிலும் விளையாட்டு முடிந்தபின்னர் சேர்ந்திருந்து முஸ்பாத்தி பண்ணியபோது பழகிய நட்பே ஒழிய, பெரிதாய் இல்லை. ஆனால் ஒருவருக்கொருவர் நன்கு தெரிந்தவர்கள்.

டேய் எவ்வளவு காலமடா..? சிரித்துக கொண்டே என்னை இறுக்கிஅணைத்துக் கொண்டான். எங்கள் இருவரைத் தவிர வேறு ஒருவரும் இல்லாதபடியால் எமக்கு அது பெரிய சுதந்திரமாகவே இருந்தது.

இப்போது அவன் என் பக்கத்திலேயே அமர்ந்துகொண்டான்.

என்ன கயன்..,இப்படி மாறிட்டாய்...?

எனது காலிலே ஊண்டியவனாய்..,நான் மாறவில்லை. என்னையெல்லாம் மாற்றி விட்டது என்று ஒரு அசட்டுச் சிரிப்புடன் தலையை ஆட்டியபடியே, இப்ப யாருமே கேள்விப்படாத, பேர் தெரியாத, ஆயிரத்தெட்டு வருத்தங்கள்.., ஒரு நாளைக்கு இரவு பகலெண்டு முப்பதுக்கு மேற்பட்ட குளிசைகளைச் சாப்பிட வேண்டியிருக்கு. அப்படியெண்டால்த்தான் உயிர் வாழலாமாம்.

எனக்கு நேர்ஸ்மார் வந்து தான் எல்லா உதவிகளையும் செய்வினம். எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. இப்படியே காலமும் வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருக்கு.

அப்ப உன்ரை பாடு என்னமாதிரி இப்ப என்ன செய்யிறாய் என்று என்னை உரிமையோடு மிக இயல்பாகவே கேட்கத் தொடங்கினான்.

நானும் எனது குடும்பம், பிள்ளைகள், வேலை எண்டும் எடுத்துச் சொல்லிவிட்டு நீ என்னமாதிரி. உன்னுடைய குடும்பம் குழந்தைகள் எனக்கேட்க.

என்ன எனக்கா..! குடும்பமா..!! என்னை யார் முடிப்பார்கள்..? எனக்கு யார் பெண் தருவார்கள்..? என்று அவன் சிரித்தபடி சொன்னாலும், அவனது சிரிப்பிலே உயிர்ப்பே இருக்கவில்லை.

தனது கைகள் இரண்டையும் சேர்த்து பொத்தியபடி தலையைக் குனிந்து கொண்டான்.

என்ன கயன் உன்னைக் கவலைப்படுத்தி விட்டேனோ..?

சீசீ... இதெல்லாம் ஒரு கவலையெண்டால்... அப்ப...

என்ரை அம்மாவும் சகோதரர்களும் என்னை கலியாணம் முடி முடி எண்டு வற்புறுத்தினவை தான், ஆனா நான் மறுத்துவிட்டேன். சும்மா அவையின்ரை ஆசைக்காக கலியாணம் செய்யலாமே..?

இல்லைக் கயன் திருமணம் எண்டால் ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்க்கையிலே கடைசிக ˙காலங்களில் அதுக்குத் தானே இந்தக் குடும்பம் மனைவியெல்லாம்.

கொஞ்ச நேரம் ஒன்றுமே பேசாது மௌனமாய் இருந்தான். தலையைச் சொறிந்தவனாய் சோபாவில் சாய்ந்தபடி உனக்கு நிறைய நேரம் இருக்குத்தானே..? வெளியே வா போட்டு வருவோம் என எழுந்தான். அவனோடு சேர்ந்து நானும் இறங்கினேன்.

வெளியிலே நல்ல காலநிலை. இது பூக்களின் மாதமானதால் அழகாகவும் நல்ல மணமாகவும் இருந்தது.

கொஞ்சத் தூரம் மெல்ல நடந்தவன் திடீரென நின்றபடி ஒன்றுமே பேசாது மவுனமாய் காலடியெடுத்து வைக்கத் தள்ளாடினான். நான் எட்டி அவனது தோளைப்பற்ற.., அவனும் இறுக்கமாய் ஒரு கையால் என் கைகளைப் பிடித்துக் கொண்டு மறு கையாலே என் தோளைப் பிடித்து தன்னை நிலைநிறுத்தியவனாய், நான் ஒரு கதையொன்று உனக்குச் சொல்லப் போறன். யாருக்கும் தெரியாத இவ்வளவு காலமும் என் மனவெளியிலே அமிழ்த்தி அமிழ்த்தி பதுக்கிப் பூட்டிவைத்த ரகசியத்தை அதை எனக்காகவும் உனக்காகவும் இண்டைக்கு உடைக்கப் போறன்.

உனக்குச் சொல்ல வேண்டும் என்று மனம் விரும்புகிறது என்றான்.

இவன் இப்படி நாடக வசனம் போலே கதைக்கத் தொடங்க மனதிலே ஒருவிதப் பயமும் பீதியும் என்னைப் பற்றிக் கொண்டது. ஏதோ சும்மா இருந்தவனின் மூளையைக் குழப்பி விட்டேனோ என்ற நினைப்பே என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டது.

ஏய் கயன் என்ன கதைக்கிறாய். என்ன என்ன என்றபோது அவனும் என்னை விளங்கியவனாய் பயப்படாதே. உண்மை ஒன்றைத்தான் உனக்குச் சொல்லப் போறன்.

ஒருவரை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக் கொண்டோம்.

எனக்கு வித்தியா எண்டொரு காதலி இருந்தவள். நாங்கள் இருவரும் ஊரில் இருந்த வேளையிலே ஒருத்தரை ஒருத்தர் விரும்பியிருந்தோம் எங்கள் இரு வீட்டாருக்கும் கூட நல்ல விருப்பம் இருந்தது.

எல்லோரைப் போலவும் சேர்ந்து வாழ வேண்டும் எண்டு விரும்பி, அவளை இங்கே கூப்பிடுவதற்கெண்டு அவளுடைய தமையனும் மாமனும் நானும் சேர்ந்து ஒரு ஏச்என்சியிடம் காசு கட்டியிருந்தோம்.

அவங்களும் சிங்கப்பூர் மலேசியா எண்டு கொண்டு வந்து, காசு காசு எண்டு கேட்ட போது நாங்களும் அனுப்பினம். பிறகு எங்கேயோ ஒரு ஆபிரிக்க நாட்டிலே கொண்டு வந்து காசு காசு எண்டாங்கள் நாங்களும் வந்து சேரத்தானே வேணும் எண்ட படியால், அங்கே இங்கெயெண்டு கடன்பட்டு அனுப்பினம். பிறகு

பிறகு

ஏதோ உக்கிறைன் எண்ட நாட்டுக்கு கொண்டு வந்து வைத்திருக்கிறோம் எண்டு சொன்னாங்கள். ஆனால் நாங்கள் ஒருத்தரும் வித்தியாவுடன் கதைக்கவோ தொடர்பு கொள்ளவோ முடியவில்லை.

அவனது நா தளதளத்து குரல் அடைத்துக் கொண்டது.

கயன் சொல்ல விருப்பமில்லாவிட்டால் பரவாயில்லை. நான் உன்னைக் கஸ்ரப்படுத்த விரும்பவில்லை கயன்.

மூச்சையிழுத்து மேலும் கீழுமாய் விட்டான். அவனது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு பொக்கற்றிலிருந்த லேஞ்சியால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்

உக்கிறைன் நாட்டிலே நிண்டபோது யாரும் ஒரு தமிழன் ரெலிபோன் எடுப்பான். இந்த நம்பருக்கு காசு அனுப்புங்கோ எண்டு கூறுவார்கள். வித்தியாவுடன் கதைக்கக் கேட்டால் ஏதோ சாட்டுகள் போக்குகள் சொல்லி விடுவாங்கள். தாங்கள் காசு அனுப்பப் பிந்தினா வித்தியாவின் வருகையும் பிந்தும் எண்டு சொல்லுவாங்கள். கடைசியிலே அவளுடைய மாமனும் நானும் களைச்சே போனோம்.

பிறகு ஒரு நாள் மாமன் ரெலிபோன் எடுத்துக் குளறினார். தம்பி அங்கே பிள்ளையை ஒரு மலைப் பிரதேசத்துக்காலே கொண்டு வரேக்கே அவ குளிர் தாங்காமல் செத்துப்போனா எண்டு யாரோ எடுத்துச் சொன்னவங்களாம்.

நானும் அவரும் அவங்களோடு தொடர்பு கொள்ள முயன்றோம். ஒரு பதிலும் இல்லை.

அதெல்லாம் முடிஞ்சு ஒரு கொஞ்ச நாளின் பின்னர், நான் வேலை செய்த இடத்திலே மயங்கிவிழுந்தனாம். ஏதோ மூளையிலே கசிவு ஏற்பட்டதாம். கொஞ்சக்காலம் ஆஸ்ப்பத்திரியிலே இருந்திட்டுத் தான் வந்தனான்.

என்ன அற்ப வாழ்க்கை. என்னுடைய வாழ்நாள் அனைத்துக்கும் ஆதாரமாய் இருந்தவள் வித்தியா எல்லாம் போய்விட்டது.

அவனது கைகளை திரும்பவும் பற்றிக் கொண்டேன்.

தொடர்ச்சி 10ம் பக்கம்



# ஊமை நெஞ்சின் ஓசைகள்

www.padippakam.com



# இனவாதத்திற்கு எதிரான இன ஐக்கியம்



இன்றைய மூன்றாம் உலகின் பலநாடுகளில் உள்ள சமுதாயங்களில் பெரும்பாலானவை நிலப்பிரபுத்துவத்தின் எச்ச-சொச்சங்களுடனேயே வாழ்கின்றன. இச்சமுதாயங்கள் பூரண முதலாளித்துவ சமுதாயமாகமாறும் வாய்ப்பை எட்டவில்லை. இதனால் இச்சமூகங்கள் பழைய சமுதாய அமைப்பின் பல கேடான கலை கலாச்சார பண்பாட்டுத் தன்மைகளையே தன்னகத்துள் கொண்டுள்ளன. இக்கேடானவைகளின் உள்வாங்கல்களைத்தான் (இன-மத-சாதி-வெறிகொண்ட) நாம் எம் நாட்டில் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒரு இனம் தன்னினத்தின் இருப்பிற்கூடான சில விசேடங்களை (மத-மொழி-கலாச்சார-பண்பாடுகளை) இனவுணர்வு கொண்டு, மற்ற இனங்களினதும் மேலான ஒன்றாகக் காட்ட முற்படும்போது அது இனவாதமாக மாறுகின்றது. இப்போக்கின் வளர்ச்சியானது ஏனைய இனங்கள் பற்றிய இழிவான மதிப்பீடுகளாக சித்தரிக்கும்போது, இன உறவுகளை சிதைத்து பகை உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றது. பகை உணர்வுகளின் உன்னதம் இனவெறியாகின்றது.

பல்லினங்கள் வாழும் நாட்டில் அவ்வினங்கள் மத்தியில்,காலம் காலமாக கட்டமைக்கப்பட்ட தவறான பற்பல எண்ணச் சிந்தனைகள், கருத்தாக்கங்கள் இருப்பது இயல்பானதே. ஆனால் இவ்வகைத் தவறான கருத்தாக்கங்கள் இன உறவுகளை வளர்க்கும் உன்னத நோக்குடன் களையப்படவேண்டும். இதற்குப் பதிலாக, பிற்போக்கு இனவாத ஆளும் வர்க்கங்கள் இன உறவுகளை சிதைக்கும் நோக்கில் தவறான இக்கருத்தாக்கங்களைத் திட்டமிட்டு வளர்த்து வருகின்றன. இந்நிலைகளால் இன உறவுகள் மிக மிகப்பாதகமான நிலைக்குத் தள்ளப்படுவதுடன், தேசிய இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் நிலைக்கும் இட்டுச்செல்கின்றது.

இலங்கையில் இன்றும் தமிழ்-சிங்கள இன வேறுபாடுகளை ஆரிய- திராவிட பிரிவுகளாகவே கற்பிதம் செய்யப்படுகின்றது. இதில் பல ஐதீகங்களிற்கு மகாவம்சம் நூல் பெரும் பங்களிக்கின்றது. இதில் இளவரசன் விஜயன் பற்றிய கதைகள்,அவனது வழித்தோன்றல்கள்தான் சிங்கள மக்கள் என்பதை வரலாற்று பொருள் முதல்வாத கண் கொண்டுபார்த்தால், இந்நூல் பொய்யான பல வரலாற்றுத் தவறுகளைத்தான் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதைக் காணமுடியும். இந்நூலிலுள்ள பலகற்பிதங்களை இலங்கையின் பல பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நிராகரித்துள்ளார்கள். இவர்களுள் போராசிரியர் வலன்றைன் பஸ்நாயக்கா முக்கியமானவர். இப்பேர்ப்பட்டதொரு நூலுக்கு,மேலும் இனவாத வலுச் சேர்க்கும் வகையில், இதன் அடுத்த திருத்தப் பதிப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூட ஓர் அதிசிறந்த சிங்களவீரஅரசனாகசித்தரிக்கப்படப் போகின்றார். இப்பேர்ப்பட்ட தவறான வரலாற்றுப் பதிவுகளாலும்,அதன் சமூக இசைவாக்கம் கொண்ட பல நடவடிக்கைகளாலும்தான் இனவாதம் அரசியலாக அரங்கேறி, இனங்களுக்கிடையிலான உறவுகளைச் சிதைக்கின்றது.

இலங்கையில் சிங்களப் பேரினவாதத்தின் கருவுருவாக்கம்,எமதுநாட்டின் சுதந்திரத்திற்குமுன்பேஉருவாக்கம் பெற்றுவிட்டது. இதை அன்றைய சட்டசபைக் காலத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தன போன்றவர்களின் இன உணர்வுப் பேச்சுக்கள்,நடவடிக்கைகளுக்கு ஊடாகக்காண முடியும். இவ்வழி நின்றே சிங்களப் பேரினவாதம் சுதந்திரத்திற்கு பின்பும் சிறுபான்மை இன மக்களுக்குஎதிரான தொடர் நடடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இதன் அடுத்தகட்டம் (இன்றைய மகிந்த அரசு வரை) இனச் சுத்திகரிப்பை மையமாகக் கொண்டதோர் வலிய ஆயுதமாகி அதனூடே சகலதும் நடந்தேறிவருகின்றன. அதன் இன்னொரு வடிவம் இனக்கலவரங்களாக தோற்றுவிக்கப்பட்டு,எம்நாட்டின் வரலாற்றில் மாபெரும் தமிழ்-இன அழிப்பிற்கே வழி கோலியது.

மறுபுறத்தில் தமிழ் இனவாதமும் குறிப்பாக சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் அரசியல் துறவறத்துடன் ஆரம்பிக்கின்றது. தமிழ்த் தேசியத்தின் ஆரம்பகாலத் தலைவர்களும் சரி,தமிழ் அரசியல் கட்சிகள்,இயக்கங்களும் சரி (தந்தை முதல் மைந்தர்கள் வரை) தமிழ் உணர்வை மூலதனமாகக் கொண்ட அரசியலுக்கு ஊடாகவே அரங்கிற்கு (அதுவும் ஆண்டபரம்பரைகள் எனும் ஆணவத் தலைக்கனம் கொண்டு) வருகின்றார்கள். காலம் காலமாக சிங்களப் பேரினவாதம் செய்த, தமிழர்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகளை, சாதாரண சிங்கள மக்களின் நடவடிக்கையாகவே தமிழ் மக்களுக்கு காட்டினார்கள். 56இல் பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இனவாதக் கண்டி யாத்திரையை முற்போக்கு சக்திகளின் தலைமையில், சாதாரண சிங்கள மக்களே முன்னின்று அடித்து விரட்டினார்கள். தமிழரசுக்கட்சி இப்பேற்பட்ட நல்ல சந்தர்ப்பங்களை தொடராகப் பாவித்து, தேசிய இனப் பிரச்சினைபற்றிய (சமஷ்டி என்பது பிரிவினையல்ல) உண்மை நிலைமைகளை சிங்கள மக்களுக்கு விளக்கியிருக்கலாம். அல்லது யூ.என்.பி.யோடு ஒட்டி உறவாடிய காலங்களிலாவது இவற்றைச் செய்ய முனைந்திருக்கலாம். ஆனால் இவ் இனவாத சக்திகள் இன ஐக்கியத்தை முன்னெடுக்க, எக்காலத்திலும் முனையமாட்டார்கள். காரணம் இவர்களின் வர்க்க நலன் கொண்ட அரசியல் இனங்களையும், இன உறவுகளையும் இல்லாதாக்கவே செய்யும். ஆகவே எமது நாட்டிலுள்ள தமிழ்-சிங்கள இனவாதிகளின் இனவாதமானது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்தான்.

எனவே இன்றைய எம் இலங்கை மக்கள், கடந்தகால இனவாத அரசுகளின் செயற்பாட்டினூடான விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதுவும் இனங்களுக்கு இடையிலான உறவுகள் சீர் குலைந்துள்ள நிலையின் ஊடாக, இராணுவம் என்றாலே அதுதான் சிங்கள மக்கள் எனவும், புலிகள் என்றால் அதுதான் தமிழ் மக்கள் என்றதோர் சிந்தனையோட்டப் படிமங்களுடன்தான் ஏகப் பெரும்பான்மையான சாதாரணமக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்று சிங்கள மக்களுக்கு உள்ள அரச அடக்குமுறை, ஜனநாயக மறுப்புடன் கூடிய அராஜகங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளுடன் கூடிய வறுமை, காணி வீடில்லாப் பிரச்சினை, கல்வி வேலையில்லாப் பிரச்சினைகள் பற்றிய புரிதல்கள் தமிழ் மக்களில் எத்தனை வீதமானோருக்கு உள்ளது? இதேபோல் தமிழ்மக்களுக்கு சிங்கள மக்களுக்கு உள்ள பிரச்சினைகளுடன், சிறுபான்மை இனமக்கள் என்ற வடிவத்திற்குள் வைத்து, பேரினவாத அரசால் இழைக்கப்படும் அடக்குமுறைகள், வன்முறைகள், இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் பற்றிய செய்திகள்,சாதாரண சிங்கள மக்களுக்கு எவ்வளவு தூரம் எட்டவைக்கப்பட்டுள்ளது.? குறைந்தபட்சம் வன்னியில் உள்ள மக்களின் அவல வாழ்வு பற்றியதான அறிதல்கள்?..,

சமகால நோக்கில் சிங்களப் பேரினவாதமும், குறுகிய தமிழ் இனவாதமும் ஏகப்பெரும்பான்மையான மக்களின் நலன்களுக்கு உகந்தவை அல்ல. கடந்த அறுபது ஆண்டுகளில் மாறிமாறிவந்த இனவாத அரசுகளின் அதிகார வர்க்கங்கள், தமிழ்-சிங்களமக்களுக்கிடையில் உள்ள இனவாத முரண்பாட்டை, பகை முரண்பாடாக வளர்ப்பதில் வெற்றிகண்டுள்ளன. இதனால் எமது நாடு,அரசியல் பொருளாதார-கலாச்சார பண்பாட்டுத் தளத்தில்,வரலாற்றில் என்றுமில்லாதஅளவு,பல அக-புறநெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இந்நெருக்கடியானது,மக்கள் மத்தியில் உள்ள அடிப்படை முரண்பாடான வர்க்க முரண்பாட்டை கூர்மையடைய வைக்கின்றது. இந்நிலையில் இதற்கெதிராக மாற்றீட்டு அரசியல் தளமொன்று கட்டியமைக்கப்படவேண்டும். இத்தளம் புரட்சிகர வெகுஜன போராட்டத் தளமாக விரிவடையவேண்டும். இதை செய்வதற்கு இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. இதற்கு தற்போது அரசுக்கெதிராகநாட்டில் நடைபெறும் மக்களின் வெகுஜனப் போராட்டங்கள் சான்றுபகர்கின்றன. எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டங்கள் உண்டு.

"கல்லொன்றை உடைக்க நூறு சம்மட்டி அடிகள் தேவைப்படுமாயிருந்தால். அந்த நூறு சம்மட்டி அடிகளையும் அடிக்கவேண்டும். நூறாவது அடியில் தான் கல் உடையும்"! இது அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில், உரையாற்றிய கட்சியொன்றின் தலைவர் கூறியவரிகள். எனவே இதுகொண்டு இனியொரு விதிசெய்வோம். எம்நாட்டுமக்களின் பிரதான எதிரியாகிய மகிந்தாவின் குடும்ப அரசையும் அதன் பாசிச-சர்வாதிகாரத்தையும் சம்மட்டி அடி அடித்து உடைத்தெறிய மக்களின் வெகுஜனத் தளத்தை முன்நகர்த்துவோம். இதற்கூடாக இனவாதத்திற்கு எதிரான ஐக்கியத்தை ஏற்படுத்துவோம்!

> **"கல்லொன்றை உடைக்க நூறு சம்மட்டி அடிகள் தேவைப்படுமாயிருந்தால். அந்த நூறு சம்மட்டி அடிகளையும் அடிக்கவேண்டும். நூ றாவது அடியில் தான் கல் உடையும!"**

வால்மார்ட்டின் வணிக முறை பங்களாதேஷில் உயிரைப் பறிக்கும் தொழிலாளர் விரோத சூழலை உருவாக்கியிருக்கிறது, சென்ற வார தீவிபத்து அதன் நேரடி விளைவு !

கடந்த சனிக்கிழமை இரவு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு அருகில் உள்ள தஸ்ரின் ஆயத்த ஆடை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 112க்கும் அதிகமான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

கீழ்த்தளத்தில் உள்ள குடோனில் ஏற்பட்ட தீ ஒவ்வொரு மாடியாக பரவியுள்ளது. மாடிப்படிகள் தீயினால் சூழப்பட்டதால் தொழிலாளர்கள் வெளியேறி முடியாமல் சிக்கியிருக்கின்றனர். அபாய நிலையில் வெளியேறுவதற்கான பாதுகாப்பு வழிகள் எதுவும் அந்தக் கட்டிடத்தில் இல்லை. சுதாரித்த தொழிலாளர்களில் பலர் ஜன்னல் கம்பிகளை உடைத்து மாடியில் இருந்து குதித்துள்ளனர்.

ஆயத்த ஆடை தொழிற்சாலைகளை எதிர்த்து ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றனர். தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ராணுவத்தையும் ஆயுதப் படைகளையும் அரசு அனுப்பியிருக்கிறது.

இந்த கொடூரமான நிகழ்வு

தீயணைப்பு வசதிகளை சரிபார்க்க உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மே 2011-ல் வால்மார்ட்டின் தணிக்கை நிறுவனத்தால் நடத்தப்பட்ட பாதுகாப்பு தணிக்கையில் தஸ்ரின் தொழிற்சாலை உயர் ஆபத்து உடையது என்பதை குறிப்பிடும் ஆரஞ்சு



வால்மார்ட் கொடுக்கும் விலையில், மிகக் குறைந்த கூலி, பாதுகாப்பு வசதிகள் இல்லாத கட்டிடங்கள், பாதுகாப்பற்ற பணிச்சூழல் என்று வியர்வைக் கூடங்களில் உற்பத்தி நடக்கிறது. தொழிலாளிகளின் சம்பளத்தை குறைப்பதில் இருந்து அவர்களுக்கு வசதிகளை குறைப்பது (மறுப்பது), அதிக நேரம் வேலை செய்ய சொல்லி கட்டாயப்படுத்துவது, மிக மோசமான பணிச்சூழலில் வேலை வாங்குவது, பாதுகாப்பிற்காக செலவு செய்யாமல் மிச்சம் பிடிப்பது என வியர்வைக் கூடங்களை உருவாக்கி வால்மார்ட்டுக்கு சேவை செய்கின்றனர் பங்களாதேஷ் முதலாளிகள்.

தமது ஊதியத்தையும் பணிச் சூழல்களையும் மேம்படுத்துவதற்கு ஒன்று சேர்ந்து போராட முனையும் தொழிலாளர்கள் மீது கடும் அடக்குமுறை அவிழ்த்து விடப் படுகிறது. வால்மார்ட்டின் வணிக முறை பங்களாதேஷில் உயிரைப்



# ”வால்மார்ட்டின்” சுரண்டலுக்கு பலியான பங்களாதேச உழைப்பாளிகள்



தீயணைப்புப் படை வீரர்கள் 100 உடல்களை மீட்டிருக்கின்றனர். தீக்காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட 12 தொழிலாளர்கள் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்திருக்கின்றனர். அந்த 8 மாடிக் கட்டிடத்தின் கூரையிலிருந்து பல தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர்.

தஸ்ரின் பேஷன்ஸ் என்ற நிறுவனம் வால்மார்ட், கேர்ரபோர், ஐக்கியா போன்ற ஐரோப்பா, அமெரிக்காவின் சில்லறை விற்பனை நிறுவனங்களுக்கு ஆடைகளை தயாரித்து அனுப்பும் தூ பா குழுமத்தின் கிளை நிறுவனமாகும். 2009-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தஸ்ரின் தொழிற்சாலையில் 1,700 பேர் வேலை செய்கின்றனர். நிறுவனம் போலோ சட்டைகள், பிளீஸ் ஜாக்கெட்டுகள், டி-ஷர்ட்டுகள் உற்பத்தி செய்கிறது.

பங்களாதேஷில் 4,000 ஆயத்த உடை தொழிற்சாலைகள் இயங்குகின்றன. அவற்றில் பல போதுமான பாதுகாப்பு வசதிகள் இல்லாமல் செயல்படுகின்றன. ஆனால் ஆண்டுக்கு கூ20 பில்லியன் (சுமார் ஷரு 1 லட்சம் கோடி) வருமானத்தை ஈட்டும் இந்தத் துறையை பங்களாதேஷ் அரசு நெறிப்படுத்துவதில்லை. பங்களாதேஷின் மொத்த ஏற்றுமதியில் 80 சதவீத மதிப்பு ஆயத்த ஆடை ஏற்றுமதியில் கிடைக்கிறது. இந்தத் துறையில் 30 லட்சத்துக்கும் அதிகமான பேர் வேலை செய்கிறார்கள். அவர்களில் 90 சதவீதம் பெண்கள்.

இந்த தீவிபத்தால் கோபமடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் இயங்கும்

பற்றிய செய்தி வெளியானதும் தனது பிம்பத்தை காத்துக் கொள்வதற்காக அந்த தொழிற்சாலையில் தனது பொருட்கள் உற்பத்தியாவது இல்லை என்று வால்மார்ட் மறுத்தது. வால்மார்ட்டின் பேடட் குளோரி பிராண்டுடனான ஆடைகள் தீக்கிரையான கட்டிடத்தில் கிடப்பதை காட்டும் புகைப்படங்கள் வெளியானவுடன், தான் தூபா குழுமத்துக்கு ஆர்டர் கொடுத்ததாகவும் அந்த நிறுவனம் சட்ட விரோதமாக இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்திருக்கிறது என்றும் மழுப்பியிருக்கிறது வால்மார்ட். இந்தத் தொழிற்சாலையில் தனது பொருட்கள் உற்பத்தி ஆவது தனக்கு தெரியவே தெரியாது என்று பசப்பியிருக்கிறது.

தூபா குழுமத்துடன் தன் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது. மேலும் உலகில் தன் நிறுவனத்திற்காக இயங்கும் தொழிற்சாலைகளில்

மதிப்பீடு பெற்றிருக்கிறது. ஆகஸ்ட் மாதம் இன்னொரு கண் துடைப்பு தணிக்கையை நடத்தி நடுத்தர ஆபத்து என்று சான்றிதழ் அளித்திருக்கிறது தணிக்கை நிறுவனம். அடுத்த ஒரு ஆண்டில் எந்த மாற்றங்களையும் செய்யாமல் தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதையும் அதிலிருந்து பொருட்களை வாங்குவதையும் வால்மார்ட் தொடர்ந்திருக்கிறது.

குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டில் ஆட்டும் அம்மாஞ்சியாக வால்மார்ட் நம்மை ஏமாற்ற முனைகிறது. குறைந்த விலைக்கு பொருட்களை விற்று உலகின் சந்தைகளை தனது பகாசுர கரங்களுக்குள் கொண்டு வந்து எண்ணற்ற சிறு தொழில்களை அழிக்கும் கலையை கடைப்பிடிக்கும் வால்மார்ட் தன் லாபத்திற்காக பொருட்களை குறைவான கூலிக்கு செய்யும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்கிறது.

பறிக்கும் தொழிலாளர் விரோத சூழலை உருவாக்கியிருப்பதாகவும் சென்ற வார தீவிபத்து அதன் நேரடி விளைவு என்றும் தொழிலாளர் நலனுக்கான கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனர் ஸ்காட் நோவா குற்றம் சாட்டியிருக்கிறார்.

தொழிலாளர் நலனையும் அது தொடர்பான சட்டங்களையும் நிறுவனங்களும் மதிப்பதில்லை அரசும் கண்டு கொள்வதில்லை.

இதுவரை தஸ்ரின் நிறுவன முதலாளிகளோ தூபா குழுமத்தின் அதிகாரிகளோ இந்த விபத்தைப் பற்றி எந்த விளக்கமும் அளிக்கவில்லை. போபால விஷவாயு விபத்திற்குப் பின் அந்நிறுவனத்தின் முதலாளியான ஆண்டர்சனை பத்திரமாக விமானம் ஏற்றி அனுப்பியதை போல் நஸரின் முதலாளி உல்லாச சுற்றுலாவை அனுபவித்துக்கொண்டிருப்பார். தீ விபத்தில் மகனையும் மருமகளையும் பறிகொடுத்துவிட்டு அவர்களின் பிணத்தை அடையாளம் காண முடியாமல் அழுது கொண்டிருக்கும் சபினா யாஸ்மின், இந்தத் தொழிற்சாலை உரிமையாளர்களை தூக்கில் போட வேண்டும் என்று அழுது கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் நுகர்வோர் மலிவு விலை ஆடைகளை வாங்க போட்டி போடுகிறார்கள். இந்தியாவில் மேட்டுக்குடியினர் குறைந்த விலையில் பொருட்களை வாங்கலாம் என்று நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீட்டை ஆதரிக்கிறார்கள்.

நன்றி: வினவு

www.padippakam.com



# பாலஸ்தீன்:
# பாலைவனத்தில் மழை

பாலஸ்தீனுக்கு பிறப்புச் சான்றிதல் . பாலைவனத்தில் என்றாவது ஒருநாள் மழை வரலாம் என்று ஒரு பல மொழி இருக்கிறது. மழை கொட்டோ கொட்டென்று கொட்டா விட்டாலும் தூரளாவது கிடைத்திருக்கிறதே. அது வரை பாலஸ்தீன மக்களுக்குக் கொண்டாட்டம் தானே.
பாலஸதீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஐக்கிய நாட்டு சபை கூட்டத் தொடரில் கலந்துக் கொண்டு விட்டு கடந்த 2ம் திகதி பாலஸ்தீனத்திற்குத் திரும்பினார். வெற்றிக் கோஷங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் மத்தியில் பாலஸ்தீன மக்கள் அவரை வரவேற்று ஆரத்தழுவி உச்சி மோந்தனர்.
மேற்குக் கரை பாலஸ்தீன மக்கள் அவரை வீராதி வீரனைப் போன்று வரவேற்றார்கள். ஐக்கிய நாட்டுச் சபையில் பாலஸ்தீனத்திற்கிருந்து கணகாணிப்பு அந்தஸ்தை உயர்த்திக் கெள்வதில் வெற்றி கொண்டமைதான் அதற்குக் காரணம். பாலஸ்தீன வரலாற்றிலேயே அது புதியதொரு அத்தியாயத்தைத் திறந்துவிட்டிருந்தது. பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டது என்பார்களே அது இதுதான். பாலஸ்தீன் மண்ணிலிருந்து ஒருகாலத்தில் ஓடஓட விரட்டப்பட்டு ஒழிந்து ஒழிந்து வாழ்ந்த இஸரேலியர்கள் இரண்டாவது மகா யுத்திற்குப் பின்னர் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியில், பாலஸ்தீனர்களுக்குச் சொந்தமான மண்ணில் ஐக்கிய நாட்டுச் சபையால் குடியமர்த்தப்பட்டார்கள். அதற்கு இஸ்ரவேல் என்றும் பெயரிட்டார்கள். 1945க்கு முன்னர் பாலஸ்தீனம் என்ற ஒரு நாடே உலக வரைபடத்தில இருக்கவில்லை என்பது வேறு விடயம்.
அன்று தொட்டு இன்று வரை இஸ்ரேல், அமிரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்கவில்லை. இஸ்ரேலின் அடாவடித்தனங்களுக்கும் அநியாயங்களுக்கும் அத்து மீறல்களுக்கும் ஆளாகி அகதிவாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருந்த பாலஸ்தீன இளைஞரகளுக்கு இது மிகப் பெரிய வெற்றிதான்.
அமெரிக்காவின் நிவ்யோர்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கட்டடத்தில் ஐ.நா. வின் கூட்டத் தொடர் நவம்பர் 28, 29ம் திகதிகளில் ஆரம்பமாகியது. பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வருடக்கணக்காக அநநாட்டு மக்கள் போராடினார்கள். தனி நாடொன்றிற்கான அனைத்துத் தகுதிகளும் பாலஸ்தீனத்திற்கு இருக்கிறது. அதனை ஒரு நாடாக அங்கீரிக்க ஐ.நா. ஒருபோதும் இணங்கியிருக்கவில்லை. ஜனாதிபதி அப்பாஸ் அதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் முயன்ற போதும் அது சாத்தியப்படவில்லை. இம்முறை வெற்றிக்கான முதற்படி அவருக்குக் கிடைத்தது. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்களே, அது நடந்தது. ஐ.நா. சபையில் உறுப்பினர் அந்தஸ்து கிடைக்காவிட்டாலும், கண்காணிப்பு அந்தஸ்து கிடைத்திருந்து. இம்முறை அதையும் தாண்டிய கண்காணிப்பு அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளக் கூடிய அங்கீகாரம் பாலஸ்தீனத்திற்கு கிடைத்திருக்கிறது. அது பாலைவனத்துக்குக் கிடைத்த மழைத்துளிகளல்லவா. மகிழ்ச்சி இல்லாமலா இருக்கும்.
பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு தீர்மானித்து 65 வருடங்களுக்குப் பின்னரே ஜனாதிபதி அப்பாஸ் அதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார். நவம்பர் 28ம் திகதி பாலஸ்தீன தினமாகவும் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஐ.நா. வில் இம்முறையும் உறுப்புரிமையை பெற்றுக் கொள்வதிலிருந்து விலகி இருக்குமாறு இஸ்ரேலின் நெருங்கிய நண்பனான அமெரிக்கா பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸிடம் கேட்டுக் கொண்டிருந்தது.



ஐ.நா. உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 193. உறுப்புரிமையைப் பெறுவதற்காக 2/3 வாக்குகள் பாலஸ்தீனத்துக்குத் தேவைப்பட்டது. பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்புரிமை பெற்றுக் கொடுக்க முயற்சித்தால் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அதனை எதிர்க்கப் போவதாக அமெரிக்கா பூச்சாண்டி காட்டியது.
ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன்னர் பாலஸ்தீன ஜனாதிபதி மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நடந்தது. இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சினை குறித்து இருவரும் நீண்ட நேரம் உரையாடியதாக செய்திகள் கூறுகின்றன.
ஐ.நா. வில் பாலஸ்தீனத்திற்கான தரத்தை உயர்த்த வேண்டுமென்று கோரி ஜனாதிபதி அப்பாஸ் முன்வைத்த விண்ணப்பத்திற்கு 138 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. இஸ்ரேல் அமெரிக்கா உள்ளிட்ட 9 நாடுகள் மாத்திரம் எதிர்த்து வாக்களித்தன. 41 நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்ததோடு 5 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ளவில்லை.
பூரண உறுப்புரிமை கிடைக்காவிட்டாலும்கூட, உறுப்பினரல்லாத கண்காணிப்பு நாடொன்றின் உயர் அந்தஸத்தை பெற முடிந்ததில் தான் மட்டற்ற மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதமி அப்பாஸ் ஆற்றிய உரை பெரும்பாலான நாடுகளின் வரவேற்பைப் பெற்றது. ஆண்டாண்டு காலமாக பாலஸ்தீன மக்கள் பட்ட அவதிகளுக்கும் அநீதிகளுக்கும் முடிவு கட்டும் முதற்படியாக இந்தச் சந்தர்ப்பத்தைக் குறிப்பிட முடியும் என்று கூறிய ஜனாதிபதி அப்பாஸ், ஐ.நா. வால் தமக்கு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் இதுதான் என பலத்த கை தட்டல்களுக்கு மத்தியில் கூறினார்.
இஸ்ரேல் என்றொரு ராஜ்ஜியம் மேற்கத்திய வல்லாதிக்கவாதிகளால் உருவாக்கப்பட்ட கையோடு, பாலஸ்தீன் என்ற புனித பூமி அகதிகள் ராஜ்ஜியமாக மாறியது. இஸ்ரேல் என்றொரு ராஜ்ஜியமா? மத்தியக் கிழக்கிலா? அதுவும் அராபியர்களின் மண்ணிலா? பாலஸ்தீன் மக்கள் கொதித்தெழுந்தார்கள். போராடினார்கள்! போராடினார்கள்!! கையில் கிடைத்த கற்களைக் கொண்டு இஸ்ரேல் படையைத் தாக்கினார்கள். 65 வருடங்களாகப் போராடினார்கள் இன்று அவர்களது வானத்திலும் நிலா காயத்துவங்கியுள்ளது. ஒரு விடியல் தெரிகிறது.
இன்று பாலஸ்தீன மக்கள் காஸாவிலும், மேற்குக் கரையிலும் வாழ்ந்து வருகிறார்கள். காஸா ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஜனாதிபதி அப்பாஸ் முதற்கொண்டு அல்பதாஹ் இயக்கத்தினால் மேற்குக் கரை ஆளப்படுகிறது. பாலஸ்தீனத்திற்கு தனி நாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாமைக்குக் காரணம் காஸாவும் மேற்குக் கரையும் வெவ்வேறு இடங்களில் அமைந்திருப்பதுதான். பாலஸ்தீனம் ஐ.நா. உறுப்புரிமையை பெற்றுக் கொண்டதில் இஸ்ரேல் கொதித்துப் போயிருக்கிறது. உறுப்பினராக இல்லாவிட்டாலும் கண்காணிப்பு மட்டத்திலான ராஜ்ஜியம் என்ற அளவுக்காவது உயர்ந்திருக்கிறது. ஐ.நா, சபையில் வாக்களிப்பதற்கான உரிமை கிடைத்திருப்பதோடு, இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து முறையான விசாரணைகளை நடத்துமாறு சர்வதேச நீதிமன்றத்திடம் முறையிடக் கூடிய வாய்ப்பும் இதன்மூலம் கிடைத்திருக்கிறது. ஐ.நா, கூட்டத் தொடரில் பாலஸ்தீனர்களுக்குக் கிடைத்த வெற்றி தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்த இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு, பாலஸ்தீனத்திற்குக் கிடைக்கும் அனைத்து உதவிகளையும் நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகவும், பாலஸ்தீனத்திற்குச் சொந்தமான நிலப் பிரதேசத்தில் துரிதமாக வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் கூறினார். இது குறித்து அதிருப்தியைத் தெரிவிக்கும் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் இஸ்ரேல், பாலஸ்தீன் நெருக்கடியை சமரசமாகத் தீர்பதற்கு இருந்த சந்தர்ப்பம் தவறிவிட்டதாகக் கூறினார்.
ஐ.நா.வில் பாலஸ்தீனத்திற்குக் கிடைத்த வெற்றிக்கு எதிர்ப்பு தெரிவித்து, பாலஸ்தீனத்திற்குச் சொந்தமான நிலப் பிரதேசங்களில் 1600 வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்களை அமைக்கும் இஸ்ரேலின் திட்டம் மற்றும் பாலஸ்தீனத்திற்கான உதவிகளை நிறுத்தும் திட்டம் போன்றவை அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளினதும் எதிர்ப்புக்குக் காரணமாக இருக்கின்றன. பாலஸ்தீனத்திற்கு எதிராக இஸ்ரேல் எடுத்துள்ள முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸும் பிரித்தானியாவும் இஸரேலிலுள்ள தமது தூதுவர்களை திருப்பி அழைக்கப் போவதாகக் கூறியிருக்கின்றன.
இஸ்ரேல் ஒரு தேசம். பாலஸ்தீன் ஒரு கனவு என்று கூறியவர்களுக்கு அந்தக் கனவு நனவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை கூறத்தான் வேண்டும்.

# போராட்டம்

400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல, கோட்டே
தொலைபேசி/பெக்ஸ்: 094-112799432
mpssrilanka@gmail.com
http://www.peoplesstruggle.com


## புதிய ஆரம்பம்

முற்போக்கான தமிழ் பத்திரிகையொன்று இலங்கையில் இல்லாமை பெரிய குறையாகவே இருந்து வந்துள்ளது. இதனால் ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு நாட்டு நடப்பிலாகட்டும், உலக மட்டத்திலாகட்டும் உண்மையான நிலைமைகளை அறிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. பெயரளவில் மாதாந்த, வாராந்திர பத்திரிகைகள் வந்தாலும் உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்பதில் சரியாகச் செயல்படுவதில்லை. முற்போக்குப் பத்திரிகை என்ற வகையில் ஓரிரு பத்திரிகைகள் காணக் கிடைத்தாலும், ஒடுக்கப்பட்ட மககளின் உண்மையான உரிமைகளுக்கான குரலாக ஒலிப்பதில்லை.

அராபிய வசந்தம் முதல் ஐரோப்பிய வசந்தம் வரையில் உலக முதலாளித்துவம் பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீள முடியாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. டியூனிஸியா பல்கலைக் கழக மாணவனின் தற்கொலையோடு ஆரம்பித்த முதலாளித்துவ பொருளாதாரத்துக்கு எதிரான மக்கள் எழுச்சி வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்ததோடு, இன்று சிரியாவின் முடிசூடா ஜனாதிபதி அல் அசாரை பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கான பேராட்டம் வரை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. ஐரோப்பாவின் பொருளாதாரச் சரிவோடும் மாணவர்களின் உரிமைப் போராட்டங்களோடும் ஆரம்பித்த மக்கள் எழுச்சி இன்று சர்வதேச மட்டத்தில் பரவலாகி, வல்லாதிக்க சக்திகளுக்கு சவாலாக மாறியிருக்கிறது. இதனால் தமது பதவி சுகங்களுக்கும் உல்லாச வாழ்க்கைக்கும் ஆபத்து வந்து விடுமோ என்ற பயந்த நவ தாராளமய முதலாளித்துவத்தின் அடிவருடிகளுக்கு குலை நடுக்கம் பிடித்துள்ளது.

சர்வ வல்லமை பொருந்திய சர்வாதிகாரம் இலங்கையில் கோலோச்சிக் கொண்டிருக்கும் நிலையில், ஒடுக்கப்பட்ட இலங்கை சமுதாயம் இனவாதக் குட்டையிலிருந்து வெளிவருவதைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தங்கு தடையின்றி நன்றாகவே நடந்துக் கொண்டிருக்கின்றன. கைதிகளும் மனிதர்களே எனறு சுவரில் எழுதக் கொண்டு, கைதிகளை மனமிதாபிமானமற்ற விதத்தில் ஈவிரக்கமின்று சாகடிக்கிறார்கள். 1500 தண்டப் பணம் கட்ட முடியாமல் தடுப்புச் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஒருவரும் வெலிக்கடை சிறைக் கொலைக்களத்தில் கொல்லப்பட்டுள்ளார்.எத்தனை அப்பாவிகள் அங்கே கொல்லப்பட்டார்கள். இலவசக் கல்வியைப் பாதுகாக்குமாறு போராடி வரும் பல்கலைக் கழக மாணவர்கள் மீது அடக்கு முறை கட்டவிழ்த்துவிடப்படுகிறது. மறைந்த வீரர்களின் நினைவாக விளக்கேற்றிய மாணவர்கள் கடத்தப்படுகிறார்கள். தான் விரும்பிய அரசியலை செய்வதற்கான உரிமை மறுக்கப்படுகிறது. தான் விரும்பிய அரசியலை தேர்ந்தெடுத்து, அந்த அரசியலை வடக்கு மக்களுக்கு எடுத்துச் சென்ற லலித் கடத்தப்படுகிறார். அவரோடு சேர்ந்து தான் ஏற்றுக் கொண்ட அரசியலை வடக்கு மக்களுக்குச் சொன்ன குகன் முருகானந்தம் கடத்தப் படுகிறார். அவர்கள் கடத்தப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிய நிலையிலும், அவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. விலைவாசி நாளுக்கு நாள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. வாழ்வதா? சாவதா? என்ற போராட்டத்தில் மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் கண்கட்டு வித்தைகளைக் காட்டி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

ஒருபுறம் சிங்கள இனவாதச் சக்திகளை போஷிக்கும் அதேவேளை, மறுபுறம் ஒடுக்கப்பட்ட தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களது ஒற்றுமையைப் பற்றி வசீகர வார்த்தை ஜாலங்கள் அள்ளி வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைவதைத் தடுப்பதற்கு தம்மாலான அனைத்தையும் அரசாங்கத்திலுள்ள இனவாதிகள் செய்துக் கொண்டிருக்கிறார்கள். தட்டிக் கேட்க ஆள் இல்லாவிடில் தம்பி சண்டப் பிரசண்டன் என்பது போல் அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இனவாதத்தை தலையில சுமந்து ஒடுக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்த தமிழ் முஸ்லிம் இனவாத அரசியல் தலைவர்களோ இனவாதத்தைப் பற்றி ஏதாவது பேசினால் தமது இனவாத நண்பர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்ற பயத்தில் அடக்கியே வாசிக்கிறார்கள். எவன் எக்கேடு கெட்டுப் போனால் எங்களுக்கென்ன, பதவி உல்லாசங்கள் தான் தேவை என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனவாதம் உள்ளவரை அவர்களுக்கும் கொண்டாட்டம்தானே!

நாடாளுமன்றம் நகைச்சுவை மன்றமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது நாடாளுமன்றத்தில் ஜோக் அடித்துவிட்டு அமரும் எதிரிக் கட்சித் தலைவரைக் கொண்டது எமது நாடு. அங்கே ஜனநாயகம் சிரிப்பாய் சிரித்துக் கொண்டிருக்கிறது. வலுவான எதிர்க் கட்சியொன்றும், முதுகெலும்புள்ள எதிர்க்கட்சி தலைவரொரும் இருந்திருந்தால் ஓரளவாவது ஜனநாயகம் இருந்திருக்கும். அதுவும் கிடையாது.

இந்த நிலையில் தான், அனைத்து வித சர்வாதிகாரங்களுக்கு எதிராகவும், அடக்குமுறை அநீதிகளுக்கும் எதிராகவும், நவ தாராளமய முதலாளித்துவத்துக்கும் அதன் சுரண்டல் கலாச்சாரத்துக்கும் எதிராகவும், ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்க முற்போக்கான பத்திரிகையொன்று தேவைப்பட்டது. அதற்காகத்தான் இந்த போராட்டம்

## கைது செய்யப்பட்ட யாழ் பல்கலை மாணவர்களை விடுதலை செய்யக் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்




கைதுசெய்யப்பட்ட மாணவர்களை உடன் விடுதலைசெய்! தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை சிதைக்காதே! தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்!

என்ற கோஷங்கள் வானைப் பிளக்க பெருந்திரளான சம உரிமை இயக்கத்தின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ரவீந்ர முதலிகே,தேசிய அமைப்பாளர் ஜூட் சில்வா புள்ளே மற்றும் ஏனைய உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

## பேதங்களை மறந்து மீனவர்கள் ஒன்று சேர்வது மகிழ்ச்சியைத் தருகிறது - பிரசன்ன அபேவிக்ரம





இனம், மதம், பிரதேசம், குலம் ஆகியவற்றைக் கடந்து வடபுலத்திலிருந்து ஹம்பாந்தோட்டை வரை இலங்கையின் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி இங்கு வந்திருக்கும் பிரதிநிதிகள் ஒரே இடத்திலிருந்து வேலைத் திட்டமொன்றைத் தயாரிப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகுமென மீனவர் அமைப்புகளின் ஒன்றியம் கூறுகிறது.

நீர்கொழும்பில் நடைபெற்ற மீனவர் அமைப்புகளின் பேச்சுக்கள் சபை கூட்டத்திற்குப் பின்னர் நடைபெற்ற மீனவர் அமைப்புகளின் சந்திப்பின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து ஊடகச் சந்திப்பின்போதே ஒருங்கிணைப்பாளர் பிரசன்ன அபேவிக்ரம மேற்கண்டவாறு கூறினார்.

மீனவர் செயற்பாட்டுக் குழு கடந்த சில மாதங்களாக நாடுபூராவுமுள்ள மீனவர் சங்கங்கள் மற்றும் மீனவர் செயற்பாட்டாளர்களைச் சந்தித்து பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியது. நாடுபூராவுமுள்ள அனைத்து மீனவர் சங்கங்களும் அவற்றின் தனித்துவங்கள் அப்படியே இருக்க, அவற்றை ஒரே அணியின் கீழ் கொண்டு வருவதே பேச்சுக்கள் சபையின் இலக்காக இருந்தது. நாடு பூராவுமுள்ள மீனவர் சங்கங்களோடு நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது அடையாளம் காணப்பட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சிணைகளுக்கு தீர்வு காண்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய வேலைத் திட்டத்தின் நகல் இந்ந பேச்சுக்கள் சபையில் முன்வைக்கப்பட்டதோடு, 34 பிரேரணைகளுடன் கூடிய அந்த வேலைத்திட்டத்தில் மீனவர்களின் மேலும் பல ஆலோசனைகளும் சேர்க்கப்பட்டன.

மீனவர் அமைப்புக்களின் ஒன்றியத்தின் நடவடிக்கைக் குழு உறுப்பினர் திரு. நாமல் பர்நாந்து, அருட் தந்தை விக்ரம பொன்சேகா அவர்கள், நடவடிக்கைக் குழு உறுப்பினர் திரு. லெனி பிரான்ஸிஸ், நடவடிக்கைக் குழு உறுப்பினர் திரு எஸ்.ஏ.டீ. ஜோசப் ஆகியோர், இன்றைய நிலையில் மீனவர்கள் முகம் கொடுக்கும் முக்கியமான பிரச்சினைகள் சம்பந்தமாகவும், விஷேடமாக இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும், தென்னிந்திய கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணு உலை காரணமாக ஏற்படப்போகும் பேரழிவுகள் குறித்தும் விளக்கமான கருத்துக்களை முன் வைத்தார்கள்.

## பாலஸ்தீன மக்களை வாழவிடு!

அமெரிக்க வல்லாதிக்கவாதிகளின் முழுமையான அனுசரணையோடு இஸ்ரேலினால் பாலஸ்தீன காஸா பிரதேசங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று நவம்பர் 23ம் திகதி கொழும்பு ஐ.நா, அலுவலகத்தின் முன்னிலையின் நடத்தப்பட்டது. மக்கள் பேராட்ட இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆரப்பாட்டத்தின் தொனிப் பொருள் “பாலஸ்தீன மக்களை வாழவிடு” என்பதாகும். படத்தில் காணப்படுவது அந்த ஆர்ப்பாட்டத்தின் ஒரு பகுதி.




கோட்டே, மாதிவெல, தலவத்துகொட பாதை, இலக்கம் 400/2ல் வசிக்கும் ஜூட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.